12th Science Lesson 14 Questions in Tamil

14] மனித நலன் மற்றும் நோய்கள்

1."உடல்நலம் என்பது வெறுமனே நோய்கள் இல்லா நிலையன்று. உடல், மனம் மற்றும் சமூக அளவிலான முழுமையான நல்வாழ்வுக்கான நிலையே உடல்நலம் என்பது ______________ வரையறையாகும்.

A) UNICEF

B) UNO

C) WHO

D) UNFAO

விளக்கம்: உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வரையறையின்படி "உடல்நலம் என்பது வெறுமனே நோய்கள் இல்லா நிலையன்று. உடல், மனம் மற்றும் சமூக அளவிலான முழுமையான நல்வாழ்வுக்கான நிலையே உடல்நலம் என்பதாகும்".

2. கீழ்க்கண்டவற்றுள் பாக்டீரியா நோய்கள் அல்லாதது எது?

A) சீதபேதி

B) பிளேக்

C) டிப்தீரியா

D) சாதாரண சளி

விளக்கம்: பாக்டீரியா நோய்கள்: சீதபேதி, பிளேக், டிப்தீரியா, காலரா, டைபாய்டு, நிமோனியா.

3. கீழ்க்கண்டவற்றுள் வைரஸ் நோய்கள் அல்லாதது எது?

A) தட்டம்மை

B) கல்லீரல் அழற்சி

C) டெங்கு காய்ச்சல்

D) மலேரியா

விளக்கம்: வைரஸ் நோய்கள்: சிக்கன்குனியா, தட்டம்மை, கல்லீரல் அழற்சி, டெங்கு காய்ச்சல்.

4. கீழ்க்கண்டவற்றுள் புரோட்டோசோவா நோய்கள் அல்லாதது எது?

A) மலேரியா

B) அமீபியாசிஸ்

C) ஆப்ரிக்க தூக்க வியாதி

D) அஸ்கரியாஸிஸ்

விளக்கம்: புரோட்டோசோவா நோய்கள்: காலா– அசார், மலேரியா, அமீபியாசிஸ், ஆப்ரிக்க தூக்க வியாதி.

5. பைலேரியாசிஸ் என்பது ______________

A) பாதப்படை

B) இளம்பிள்ளை வாதம்

C) யானைக்கால் நோய்

D) சின்னம்மை

விளக்கம்: பைலேரியாசிஸ் என்பது யானைக்கால் நோய் ஆகும்.

6. போலியோ மைலிடிஸ் என்பது _____________

A) பாதப்படை

B) இளம்பிள்ளை வாதம்

C) யானைக்கால் நோய்

D) சின்னம்மை

விளக்கம்: போலியோ மைலிடிஸ் என்பது இளம்பிள்ளை வாதம் ஆகும்.

7. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] கேண்டிடியாசிஸ் என்பது வைரஸ் நோய் ஆகும்.

2] பாதப்படை என்பது பூஞ்சை நோய் ஆகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: கேண்டிடியாசிஸ் என்பது பூஞ்சை நோய் ஆகும். பாதப்படை என்பது பூஞ்சை நோய் ஆகும்.

8. கூற்று(A): ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு நோய்கள் பரவுகிறது.

காரணம்(R): இந்நோய்கள் தொற்றா நோய்கள் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும் நோய்கள் தொற்று நோய்கள் அல்லது பரவும் நோய்கள் (Communicable diseases) எனப்படுகிறது.

9. கூற்று(A): நோய்த்தொற்றிய நபரிடமிருந்து ஆரோக்கியமான நபருக்கு எந்த நிலையிலும் நோய்கள் பரவாது.

காரணம்(R): இந்நோய்கள் தொற்றா நோய்கள் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: நோய்த்தொற்றிய நபரிடமிருந்து ஆரோக்கியமான நபருக்கு எந்த நிலையிலும் பரவாதவை தொற்றாநோய்கள் ஆகும்.

10. தொற்று நோய்கள்_____________ நோய்கள் எனப்படுகிறது.

A) பரவாத நோய்கள்

B) பரவும் நோய்கள்

C) நோயூக்கிகள்

D) இவற்றில் எதுவுமில்லை

விளக்கம்: தொற்று நோய்கள் பரவும் நோய்கள் (Communicable diseases) எனப்படுகிறது.

11. தொற்று நோய்கள் உண்டாக்கும் உயிரிகள்_____________ ஆகும்.

A) பரவாத நோய்கள்

B) பரவும் நோய்கள்

C) நோயூக்கிகள்

D) இவற்றில் எதுவுமில்லை

விளக்கம்: தொற்று நோய்கள் உண்டாக்கும் உயிரிகள் நோயூக்கிகள் (Pathogens) ஆகும்.

12. கீழ்க்கண்டவற்றுள் நோயூக்கிகள் எவை?

A) காற்று

B) உணவு

C) வைரஸ்

D) இவை அனைத்தும்

விளக்கம்: காற்று, நீர், உணவு, உடல் தொடர்பு மற்றும் நோய்க்கடத்திகள் மூலம் பரவுகின்றன. வைரஸ், பாக்டீரியா, பூஞ்சை, புரோட்டோசோவா ஒட்டுண்ணிகள் மற்றும் புழுவின ஒட்டுண்ணிகள் போன்றவை நோயூக்கிகள் ஆகும்.

13. _____________ நோய்கள் குணப்படுத்தப்பட கூடியவை.

A) வைரஸ்

B) பூஞ்சை

C) பாக்டீரியா

D) புரோட்டோசோவா

விளக்கம்: பாக்டீரிய நோய்கள் குணப்படுத்தப்பட கூடியவை.

14. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] தொற்று நோய்கள் பொதுவானவை.

2] வைரஸ் நோய்கள் அனைத்தும் குணப்படுத்த கூடியவை அல்ல.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: தொற்று நோய்கள் பொதுவானவை. வைரஸ் நோய்கள் அனைத்தும் குணப்படுத்த கூடியவை அல்ல.

15. தொற்றா நோய்களில்______________ இறப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.

A) மாரடைப்பு

B) பக்கவாதம்

C) மூட்டுவலி

D) புற்றுநோய்

விளக்கம்: தொற்றா நோய்களில் புற்றுநோய் இறப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.

16. ______________ போன்ற வைரஸ் தொற்றினை குணப்படுத்த உயிர் எதிர்ப்பொருட்களை பயன்படுத்தக் கூடாது.

A) சாதாரண சளி

B) தலைவலி

C) வாய்புண்

D) மூட்டு வலி

விளக்கம்: சாதாரண சளி அல்லது காய்ச்சல் போன்ற வைரஸ் தொற்றினை குணப்படுத்த உயிர் எதிர்ப்பொருட்களை பயன்படுத்தக் கூடாது.

17. ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான நோய்காரணி______________

A) கிளாஸ்ட்ரிடியம்டெட்டனி

B) எர்சினியா பெஸ்டிஸ்

C) ஷிஜெல்லா சிற்றினம்

D) ஸ்ட்ரெப்டோகாக்கஸ்

விளக்கம்: ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான நோய்காரணி: ஷிஜெல்லா சிற்றினம்.

18. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] புபோனிக் பிளேக் நோய்க்கான நோய்காரணி: கோரினிபாக்டீரியம் டீப்தீரியே

2] டிப்தீரியா நோய்க்கான நோய்காரணி: எர்சினியா பெஸ்டிஸ்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: புபோனிக் பிளேக் நோய்க்கான நோய்காரணி: எர்சினியா பெஸ்டிஸ் ஆகும். டிப்தீரியா நோய்க்கான நோய்காரணி: கோரினிபாக்டீரியம் டீப்தீரியே ஆகும்.

19. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] காலரா நோய்க்கான நோய்காரணி: கிளாஸ்ட்ரிடியம் டெட்டனி

2] டெட்டனஸ் நோய்க்கான நோய்காரணி: விப்ரியோ காலரே

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: காலரா நோய்க்கான நோய்காரணி: விப்ரியோ காலரே ஆகும். டெட்டனஸ் நோய்க்கான நோய்காரணி: கிளாஸ்ட்ரிடியம் டெட்டனி ஆகும்.

20. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டைஃபாய்டு நோய்க்கான நோய்காரணி: ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியே

2] நிமோனியா நோய்க்கான நோய்காரணி: சால்மோனெல்லா டைஃபி

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டைஃபாய்டு நோய்க்கான நோய்காரணி: சால்மோனெல்லா டைஃபி ஆகும். நிமோனியா நோய்க்கான நோய்காரணி: ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியே ஆகும்.

21. காசநோய் நோய்க்கான நோய்காரணி_____________

A) எர்சினியா பெஸ்டிஸ்

B) கிளாஸ்ட்ரிடியம் டெட்டனி

C) சால்மோனெல்லா டைஃபி

D) மைக்கோ பாக்டீரியம் டியூபர்குளோசிஸ்

விளக்கம்: காசநோய் நோய்க்கான நோய்காரணி: மைக்கோ பாக்டீரியம் டியூபர்குளோசிஸ் ஆகும்.

22. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நிணநீர் முடிச்சுகள்

2] புபோனிக் பிளேக் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல் ஆகும். புபோனிக் பிளேக் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நிணநீர் முடிச்சுகள் ஆகும்.

23. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டிப்தீரியா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல்

2] காலரா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குரல்வளை

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டிப்தீரியா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குரல்வளை, தோல், சுவாச மற்றும் இனப்பெருக்கப் பாதை ஆகும். காலரா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல் ஆகும்.

24. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டெட்டனஸ் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல்

2] டைஃபாய்டு நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி இழுப்பு

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டெட்டனஸ் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி இழுப்பு ஆகும். டைஃபாய்டு நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி குடல் ஆகும்.

25. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] நிமோனியா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நுரையீரல்

2] காசநோய் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நுரையீரல்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: நிமோனியா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நுரையீரல் ஆகும். காசநோய் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி நுரையீரல் ஆகும்.

26. கீழ்க்கண்டவற்றுள் ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) வயிற்று வலி

B) மலக்கழிவில் இரத்தம்

C) கோழை காணப்படுதல்

D) காய்ச்சல்

விளக்கம்: ஷிஜெல்லோசிஸ் நோய்க்கான அறிகுறிகள்: வயிற்று வலி, நீரிழப்பு, மலக்கழிவில் இரத்தம், கோழை காணப்படுதல்.

27. கீழ்க்கண்டவற்றுள் புபோனிக் பிளேக் நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) காய்ச்சல்

B) தலைவலி

C) வீங்கிய நிணநீர் முடிச்சுகள்

D) தொண்டை வலி

விளக்கம்: புபோனிக் பிளேக் நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், தலைவலி, வீங்கிய நிணநீர் முடிச்சுகள்.

28. கீழ்க்கண்டவற்றுள் டிப்தீரியா நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) காய்ச்சல்

B) தொண்டை வலி

C) கரகரப்பான தொண்டை

D) வயிற்றுப்போக்கு

விளக்கம்: டிப்தீரியா நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், தொண்டை வலி, கரகரப்பான தொண்டை மற்றும் சுவாசித்தலில் இடர்பாடு.

29. கீழ்க்கண்டவற்றுள் டெட்டனஸ் நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) தாடை தசைகள் விறைத்தல்

B) மிகை இதயத்துடிப்பு

C) முகம் மற்றும் தாடை தசைஇழுப்பு

D) தலைவலி

விளக்கம்: டெட்டனஸ் நோய்க்கான அறிகுறிகள்: தாடை தசைகள் விறைத்தல், மிகை இதயத்துடிப்பு, முகம் மற்றும் தாடை தசைஇழுப்பு.

30. கீழ்க்கண்டவற்றுள் டைஃபாய்டு நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) தலைவலி

B) அசௌகரியமான வயிறு

C) காய்ச்சல்

D) தொண்டை வலி

விளக்கம்: டைஃபாய்டு நோய்க்கான அறிகுறிகள்: தலைவலி, அசௌகரியமான வயிறு, காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு.

31. கீழ்க்கண்டவற்றுள் நிமோனியா நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) காய்ச்சல்

B) இருமல்

C) வலியுடன் கூடிய சுவாசம்

D) நீரிழப்பு

விளக்கம்: நிமோனியா நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், இருமல், வலியுடன் கூடிய சுவாசம், மற்றும் பழுப்பு நிற சளி.

32. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] காலரா நோய்க்கான அறிகுறிகள்: மூக்கின் வழியாக அடர் கோழை வெளியேற்றம்.

2] காசநோய்க்கான அறிகுறிகள்: கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழப்பு.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: காலரா நோய்க்கான அறிகுறிகள்: கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழப்பு. காசநோய்க்கான அறிகுறிகள்: மூக்கின் வழியாக அடர் கோழை வெளியேற்றம்.

33. சாதாரண சளி நோய்க்கான நோய்க்காரணி_____________

A) மம்ப்ஸ் வைரஸ்

B) ரைனோ வைரஸ்கள்

C) ருபல்லா வைரஸ்

D) ஹெப்பாடைட்டிஸ்–B

விளக்கம்: சாதாரண சளி நோய்க்கான நோய்க்காரணி: ரைனோ வைரஸ்கள்.

34. புட்டாளம்மை நோய்க்கான நோய்க்காரணி_____________

A) மம்ப்ஸ் வைரஸ்

B) ரைனோ வைரஸ்கள்

C) ருபல்லா வைரஸ்

D) ஹெப்பாடைட்டிஸ்–B

விளக்கம்: புட்டாளம்மை நோய்க்கான நோய்க்காரணி: மம்ப்ஸ் வைரஸ்.

35. தட்டம்மை நோய்க்கான நோய்க்காரணி_____________

A) மம்ப்ஸ் வைரஸ்

B) ரைனோ வைரஸ்கள்

C) ருபல்லா வைரஸ்

D) ஹெப்பாடைட்டிஸ்–B

விளக்கம்: தட்டம்மை நோய்க்கான நோய்க்காரணி: ருபல்லா வைரஸ்.

36. கல்லீரல் அழற்சி நோய்க்கான நோய்க்காரணி_____________

A) மம்ப்ஸ் வைரஸ்

B) ரைனோ வைரஸ்கள்

C) ருபல்லா வைரஸ்

D) ஹெப்பாடைட்டிஸ்–B

விளக்கம்: கல்லீரல் அழற்சி நோய்க்கான நோய்க்காரணி: ஹெப்பாடைட்டிஸ்–B

37. சின்னம்மை நோய்க்கான நோய்க்காரணி_____________

A) வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ்

B) போலியோ வைரஸ்

C) டெங்கு வைரஸ்

D) ஆல்ஃபா வைரஸ்

விளக்கம்: சின்னம்மை நோய்க்கான நோய்க்காரணி: வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ்.

38. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இளம்பிள்ளை வாதம் நோய்க்கான நோய்க்காரணி: டெங்கு வைரஸ்.

2] டெங்கு காய்ச்சல் நோய்க்கான நோய்க்காரணி: போலியோ வைரஸ்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இளம்பிள்ளை வாதம் நோய்க்கான நோய்க்காரணி: போலியோ வைரஸ். டெங்கு காய்ச்சல் நோய்க்கான நோய்க்காரணி: டெங்கு வைரஸ்.

39. சிக்குன்குன்யா நோய்க்கான நோய்க்காரணி_____________

A) வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ்

B) போலியோ வைரஸ்

C) டெங்கு வைரஸ்

D) ஆல்ஃபா வைரஸ்

விளக்கம்: சிக்குன்குன்யா நோய்க்கான நோய்க்காரணி: ஆல்ஃபா வைரஸ்.

40. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] சாதாரண சளி நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: உமிழ்நீர்ச் சுரப்பி.

2] புட்டாளம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: சுவாசப் பாதை.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: சாதாரண சளி நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: சுவாசப் பாதை. புட்டாளம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: உமிழ்நீர்ச் சுரப்பி.

41. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] தட்டம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: கல்லீரல்.

2] கல்லீரல் அழற்சி நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: தோல் மற்றும் சுவாசப்பாதை.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: தட்டம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: தோல் மற்றும் சுவாசப்பாதை. கல்லீரல் அழற்சி நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: கல்லீரல்.

42. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] சின்னம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: குடல்.

2] இளம்பிள்ளை வாதம் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: நரம்பு மண்டலம்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: சின்னம்மை நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: சுவாசப்பாதை, தோல் மற்றும் நரம்பு மண்டலம். இளம்பிள்ளை வாதம் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: குடல், மூளை, தண்டுவடம்.

43. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டெங்கு காய்ச்சல் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: நரம்பு மண்டலம்.

2] சிக்குன்குன்யா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: இரத்தம்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டெங்கு காய்ச்சல் நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: தோல் மற்றும் இரத்தம். சிக்குன்குன்யா நோய்க்கான நோய்த் தொற்றும் பகுதி: நரம்பு மண்டலம்.

44. டோகா வைரஸ் எனப்படுவது_____________

A) வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ்

B) போலியோ வைரஸ்

C) டெங்கு வைரஸ்

D) ஆல்ஃபா வைரஸ்

விளக்கம்: சிக்குன்குன்யா நோய்க்கான நோய்க்காரணி: ஆல்ஃபா வைரஸ் (டோகா வைரஸ்).

45. போலியோ வைரஸ் எனப்படுவது_____________

A) ஆர்.என்.ஏ வைரஸ்

B) டி.என்.ஏ வைரஸ்

C) பாராமிக்சோ வைரஸ்

D) ஃபிளேவி வைரஸ்

விளக்கம்: இளம்பிள்ளை வாதம் நோய்க்கான நோய்க்காரணி: போலியோ வைரஸ் (ஆர்.என்.ஏ வைரஸ்).

46. DENV வைரஸ் எனப்படுவது_____________

A) ஆர்.என்.ஏ வைரஸ்

B) டி.என்.ஏ வைரஸ்

C) பாராமிக்சோ வைரஸ்

D) ஃபிளேவி வைரஸ்

விளக்கம்: டெங்கு காய்ச்சல் நோய்க்கான நோய்க்காரணி: டெங்கு வைரஸ் (அ) ஃபிளேவி வைரஸ் (DENV அல்லது 1–4 வைரஸ்).

47. வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ் எனப்படுவது_____________

A) ஆர்.என்.ஏ வைரஸ்

B) டி.என்.ஏ வைரஸ்

C) பாராமிக்சோ வைரஸ்

D) ஃபிளேவி வைரஸ்

விளக்கம்: சின்னம்மை (Chicken pox) நோய்க்கான நோய்க்காரணி: வேரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ் (Varicella–Zoster virus) (டி.என்.ஏ வைரஸ்).

48. ருபல்லா வைரஸ் எனப்படுவது_____________

A) ஆர்.என்.ஏ வைரஸ்

B) டி.என்.ஏ வைரஸ்

C) பாராமிக்சோ வைரஸ்

D) A மற்றும் C

விளக்கம்: தட்டம்மை நோய்க்கான நோய்க்காரணி: ருபல்லா வைரஸ்(Rubella virus) (ஆர்.என்.ஏ வைரஸ்) பாராமிக்சோ வைரஸ் (Paramyxo virus).

49. மம்ப்ஸ் வைரஸ் எனப்படுவது____________

A) ஆர்.என்.ஏ வைரஸ்

B) டி.என்.ஏ வைரஸ்

C) பாராமிக்சோ வைரஸ்

D) A மற்றும் C

விளக்கம்: புட்டாளம்மை நோய்க்கான நோய்க்காரணி: மம்ப்ஸ் வைரஸ் (ஆர்.என்.ஏ வைரஸ்) பாராமிக்சோ வைரஸ் (Paramyxo virus)

50. கீழ்க்கண்டவற்றுள் சாதாரண சளி நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) மூக்கடைப்பு

B) தொண்டை வலி

C) இருமல்

D) மூக்கு ஒழுகல்

விளக்கம்: சாதாரண சளி நோய்க்கான அறிகுறிகள்: மூக்கடைப்பு மற்றும் கோழை வெளியேற்றம், தொண்டை வலி, இருமல் மற்றும் தலைவலி.

51. கீழ்க்கண்டவற்றுள் தட்டம்மை நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) கரகரப்பான தொண்டை

B) மூக்கு ஒழுகல்

C) காய்ச்சல்

D) தொண்டை வலி

விளக்கம்: தட்டம்மை நோய்க்கான அறிகுறிகள்: கரகரப்பான தொண்டை, மூக்கு ஒழுகல், இருமல், காய்ச்சல், மற்றும் தோல், கழுத்து, காதுகளில் ஏற்படும் சிவப்பு நிறத் தடிப்புகள்.

52. கீழ்க்கண்டவற்றுள் கல்லீரல் அழற்சி நோய்க்கான அறிகுறிகள் அல்லாதது எது?

A) கல்லீரல் சிதைவு

B) மஞ்சள் காமாலை

C) மஞ்சள் நிற கண்கள்

D) தசை மற்றும் மூட்டுவலி

விளக்கம்: கல்லீரல் அழற்சி நோய்க்கான அறிகுறிகள்: கல்லீரல் சிதைவு, மஞ்சள் காமாலை, குமட்டல், மஞ்சள் நிற கண்கள், காய்ச்சல் மற்றும் வயிற்று வலி.

53. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டெங்கு காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள்: திடீரென தோன்றும் அதிக காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டுவலி.

2] சிக்குன்குன்யா நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், மூட்டுவலி, தலைவலி மற்றும் மூட்டுகளில் வீக்கம்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டெங்கு காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள்: திடீரென தோன்றும் அதிக காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டுவலி. சிக்குன்குன்யா நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், மூட்டுவலி, தலைவலி மற்றும் மூட்டுகளில் வீக்கம்.

54. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இளம்பிள்ளை வாதம் நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், தசை விறைப்பு மற்றும் வலுவிழத்தல், பக்கவாதம் மற்றும் சுவாசக் கோளாறு.

2] சின்னம்மை நோய்க்கான அறிகுறிகள்: லேசான காய்ச்சலுடன் தோல் அரிப்பு, தோல் தடிப்பு மற்றும் கொப்புளம்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இளம்பிள்ளை வாதம் நோய்க்கான அறிகுறிகள்: காய்ச்சல், தசை விறைப்பு மற்றும் வலுவிழத்தல், பக்கவாதம் மற்றும் சுவாசக் கோளாறு. சின்னம்மை நோய்க்கான அறிகுறிகள்: லேசான காய்ச்சலுடன் தோல் அரிப்பு, தோல் தடிப்பு மற்றும் கொப்புளம்.

55. மேலண்ண சுரப்பியில் (Parotid) வீக்கம் ஏற்படுதல் எந்நோய்க்கான அறிகுறி ஆகும்?

A) புட்டாளம்மை

B) தட்டம்மை

C) சின்னம்மை

D) சிக்குன்குன்யா

விளக்கம்: புட்டாளம்மை நோய்க்கான அறிகுறிகள்: மேலண்ண சுரப்பியில்(Parotid) வீக்கம் ஏற்படுதல்.

56. _____________ மூலம் டைபாய்டு காய்ச்சல்இருப்பதை உறுதி செய்யலாம்.

A) எலைசா சோதனை

B) லின்டால் சோதனை

C) வலைசா சோதனை

D) வைடால் சோதனை

விளக்கம்: 'வைடால் சோதனை' (Widal test) மூலம் டைபாய்டு காய்ச்சல்இருப்பதை உறுதி செய்யலாம்.

57. _____________ உயிருள்ள செல்களுக்குள் இனப்பெருக்கம் செய்கின்ற, மிகச்சிறிய அகச்செல் நிலைமாறா ஒட்டுண்ணிகள் ஆகும்.

A) பாக்டீரியா

B) புரோட்டோசோவா

C) வைரஸ்

D) பூஞ்சை

விளக்கம்: வைரஸ்கள் என்பவை உயிருள்ள செல்களுக்குள் இனப்பெருக்கம் செய்கின்ற, மிகச்சிறிய அகச்செல் நிலைமாறா ஒட்டுண்ணிகள் ஆகும்.

58. பன்றிக்காய்ச்சல் முதன்முதலில் _____________ ஆம் ஆண்டுதொற்று நோயாக அங்கீகரிக்கப்பட்டது.

A) 1920

B) 1919

C) 1918

D) 1917

விளக்கம்: பன்றிக்காய்ச்சல் முதன்முதலில் 1919 ஆம் ஆண்டு தொற்று நோயாக அங்கீகரிக்கப்பட்டு, இன்றளவு ம் பருவக்காலங்களில் ஏற்படும் காய்ச்சலாக அறியப்படுகிறது.

59. _____________ வைரஸ் மூலம் பன்றிக்காய்ச்சல் ஏற்படுகிறது.

A) H2N2

B) H2N1

C) H1N2

D) H1N1

விளக்கம்: H1N1 வைரஸ் மூலம் பன்றிக்காய்ச்சல் ஏற்படுகிறது.

60. பன்றிக்காய்ச்சல் நோயின் அறிகுறிகள் யாவை?

A) காய்ச்சல்

B) இருமல்

C) தொண்டை வலி

D) இவை அனைத்தும்

விளக்கம்: காய்ச்சல், இருமல், தொண்டை வலி, குளிர், வலுவிழத்தல் மற்றும் உடல்வலி போன்றவை பன்றிக்காய்ச்சல் நோயின் அறிகுறிகளாகும்.

61. _____________ வைரஸ் என்பது ஒரு சூனோடிக் (zoonotic) வைரஸ் ஆகும்.

A) ரைனோ

B) நிபா

C) சூனோ

D) ரைபா

விளக்கம்: நிபா வைரஸ் (Nipah virus) என்பது ஒரு சூனோடிக் (zoonotic) வைரஸ் ஆகும்.

62. வைரஸ் நோய்களின் வகைகள் யாவை?

A) சுவாச நோய்கள்

B) தோல் நோய்கள்

C) உள்ளுறுப்பு நோய்கள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: உடல் உறுப்புகளில் தோன்றும் அறிகுறிகளை அடிப்படையாகக் கொண்டு வைரஸ் நோய்கள் பொதுவாக நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சுவாச நோய்கள், தோல் நோய்கள், உள்ளுறுப்பு நோய்கள், நரம்பு நோய்கள்.

63. பொருத்துக

a) சுவாச நோய்கள் – 1] சின்னம்மை மற்றும் தட்டம்மை

b) தோல் நோய்கள் – 2] இன்புளுயன்சா தொற்றிய சுவாசப் பாதை

c) உள்ளுறுப்பு நோய்கள் – 3] ரேபிஸ் மற்றும் இளம்பிள்ளை வாதம்

d) நரம்பு நோய்கள் – 4] மஞ்சள் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல்

a b c d

A) 3 1 2 4

B) 2 1 3 4

C) 2 4 3 1

D) 2 1 4 3

64. சாதாரண சளியானது _____________ க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான ரைனோ வைரசுகளால் ஏற்படுகிறது.

A) 160

B) 170

C) 150

D) 140

விளக்கம்: சாதாரண சளியானது 150 க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான ரைனோ வைரசுகளால் ஏற்படுகிறது.

65. கூற்று(A): ரைனோ வைரசுக ளின் RNA ஜீனோம் தொடர்ந்து திடீர் மாற்றங்களால் மாறிக்கொண்டே இருக்கும்.

காரணம்(R): சாதாரண சளிக்கு ஒரு பொதுவான தடுப்பூசி உருவாக்குவதில் மிகுந்த சிக்கல் ஏற்படுகிறது.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: சாதாரண சளியானது 150 க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான ரைனோ வைரசுகளால் ஏற்படுகிறது. மேலும் அவைகளின் RNA ஜீனோம் தொடர்ந்து திடீர் மாற்றங்களால் மாறிக்கொண்டே இருக்கும் காரணத்தினால், சாதாரண சளிக்கு ஒரு பொதுவான தடுப்பூசி உருவாக்குவதில் மிகுந்த சிக்கல் ஏற்படுகிறது.

66. மனித உடலில் _____________ புரோட்டோசோவா இனங்கள் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து நோயை ஏற்படுத்துகின்றன.

A) 14

B) 15

C) 16

D) 17

விளக்கம்: மனித உடலில் ஏறத்தாழ 15 புரோட்டோசோவா இனங்கள் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து நோயை ஏற்படுத்துகின்றன.

67. விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு பரவக்கூடிய வைரஸ்_____________

A) ரைனோ

B) நிபா

C) சூனோ

D) ரைபா

விளக்கம்: நிபா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு பரவக்கூடியது.

68. அமீபியாசிஸ் என்பது_____________ எனும் புரோட்டோசோவாவினால் ஏற்படுத்தப்படும்,

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா டோனோவானி

D) எண்டமீபா ஹிஸ்டோலைடிகா

விளக்கம்: அமீபியாசிஸ் (Amoebiasis) என்பது எண்டமீபா ஹிஸ்டோலைடிகா (Entamoeba histolytica) எனும் புரோட்டோசோவாவினால் ஏற்படுத்தப்படும்,

69. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] அமீபிக் சீதபேதி அல்லது அமீபிக் பெருங்குடல் அழற்சி நோயாகும்.

2] இவை மனித பெருங்குடலில் உள்ள தோழமை செல்கள்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: அமீபிக் சீதபேதி அல்லது அமீபிக் பெருங்குடல் அழற்சி நோயாகும். இவை மனித பெருங்குடலில் உள்ள கோழை செல்கள், பாக்டீரியாக்களையும் உட்கொண்டு வாழ்கின்றன.

70. எண்டமீபா ஹிஸ்டோலைடிகா ஒட்டுண்ணியின் நோயுண்டாக்கும் நிலை_____________

A) மோர்சிடன்ஸ்

B) டோனோவானி

C) மெஜிஸ்டா

D) டிரோபோசோய்ட்

விளக்கம்: எண்டமீபா ஹிஸ்டோலைடிகா ஒட்டுண்ணியின் நோயுண்டாக்கும் நிலை டிரோபோசோய்ட் (Trophozoite) ஆகும்.

71. அமீபிக் சீதபேதி நோயின் ஒட்டுண்ணியை கடத்தும் கடத்தியாக_____________ செயலாற்றுகின்றன.

A) வீட்டு ஈ

B) செட்சி ஈ

C) மணல் பூச்சி

D) மணல் செட்சி

விளக்கம்: மலக்கழிவு கலந்த கெட்டுப்போன உணவு மற்றும் நீரில் இருந்து அமீபிக் சீதபேதி நோயின் ஒட்டுண்ணியை கடத்தும் கடத்தியாக வீட்டு ஈக்கள் (Musca domestica) செயலாற்றுகின்றன.

72. ஆப்பிரிக்க தூக்க வியாதி என்பது_____________ சிற்றினங்களால் ஏற்படுத்தப்படுவதாகும்.

A) கிளாசினா

B) டிரையடோமா

C) லீஷ்மேனியா

D) டிரிப்பனோசோமா

விளக்கம்: ஆப்பிரிக்க தூக்க வியாதி என்பது டிரிப்பனோசோமா சிற்றினங்களால் ஏற்படுத்தப்படுவதாகும்.

73. _____________ என்ற இரத்த உறிஞ்சி ஈக்களால் டிரிப்பனோசோமா கடத்தப்படுகிறது.

A) வீட்டு ஈ

B) செட்சி ஈ

C) மணல் பூச்சி

D) மணல் செட்சி

விளக்கம்: பொதுவாக செட்சி (Tsetse) என்ற இரத்த உறிஞ்சி ஈக்களால் டிரிப்பனோசோமா கடத்தப்படுகிறது.

74. டி. கேம்பியன்ஸ்_____________ என்ற செட்சி ஈக்களால் பரவுகிறது.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா டோனோவானி

D) கிளாசினா பல்பாலிஸ்

விளக்கம்: டி. கேம்பியன்ஸ் (T. gambiense), கிளாசினா பல்பாலிஸ் (Glossina palpalis) என்ற செட்சி ஈக்களால் பரவுகிறது.

75. மத்திய ஆப்பிரிக்க தூக்க வியாதியை _____________ ஏற்படுத்துகிறது.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா டோனோவானி

D) கிளாசினா பல்பாலிஸ்

விளக்கம்: கிளாசினா பல்பாலிஸ் கேம்பியன் காய்ச்சல் (Gambian fever) அல்லது மத்திய ஆப்பிரிக்க தூக்க வியாதியை ஏற்படுத்துகிறது.

76. டி.ரோடீசியன்ஸ்_____________ என்ற செட்சி ஈக்களால் பரவுகிறது.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா டோனோவானி

D) கிளாசினா பல்பாலிஸ்

விளக்கம்: டி.ரோடீசியன்ஸ் (T. rhodesiense) கிளாசினா மோர்சிடன்ஸ் (G. morsitans) என்ற வகை செட்சி ஈக்களால் பரவுகிறது.

77. _____________ கிழக்கு ஆப்பிரிக்க தூக்க வியாதியை ஏற்படுத்துகிறது.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா டோனோவானி

D) கிளாசினா பல்பாலிஸ்

விளக்கம்: கிளாசினா மோர்சிடன்ஸ் ரோடீசியன் அல்லது கிழக்கு ஆப்பிரிக்க தூக்க வியாதியை ஏற்படுத்துகிறது.

78. கூற்று(A): டி. குரூசி (T. cruzi), டிரையடோமா மெஜிஸ்டா (Triatoma magista) என்ற பூச்சிகளால் பரவுகிறது.

காரணம்(R): இது காலா–அசார் என்ற நோயை ஏற்படுத்துகிறது.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: டி. குரூசி (T. cruzi), டிரையடோமா மெஜிஸ்டா (Triatoma magista) என்ற பூச்சிகளால் பரவுகிறது. இது சாகாஸ் நோய் அல்லது அமெரிக்க தூக்க வியாதி (American trypanosomiasis) என்ற நோயை ஏற்படுத்துகிறது.

79. காலா–அசார் _____________ என்னும் ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா மெஜிஸ்டா

D) லீஷ்மேனியா டோனோவானி

விளக்கம்: காலா–அசார் அல்லது வயிற்றறை லீஷ்மேனியாசிஸ் என்ற நோய் லீஷ்மேனியா டோனோவானி (Leishmania donovani) என்னும் ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது.

80. காலா–அசார் நோயை_____________ நோய்க்கடத்திகள் பரப்புகின்றன.

A) வீட்டு ஈ

B) செட்சி

C) மணல் பூச்சி

D) மணல் செட்சி

விளக்கம்: காலா–அசார் நோயை மணல்பூச்சி (Phlebotomus) என்ற நோய்க்கடத்திகள் பரப்புகின்றன.

81. கீழ்க்கண்டவற்றுள் காலா–அசார் நோயால்தொற்று ஏற்படும் இடங்கள் அல்லாதவை எவை?

A) எலும்பு மஜ்ஜை

B) கல்லீரல்

C) மண்ணீரல்

D) நுரையீரல்

விளக்கம்: காலா–அசார் நோயால் எலும்பு மஜ்ஜை, கல்லீரல், நிணநீர் சுரப்பிகள் மற்றும் மண்ணீரலின் இரத்தக் குழாய்கள் ஆகியவற்றில் தொற்று ஏற்படுகிறது.

82. கீழ்க்கண்டவற்றுள் காலா–அசார் நோயின் அறிகுறிகள் அல்லாதவை யாவை?

A) எடை குறைதல்

B) இரத்த சோகை

C) காய்ச்சல்

D) தலைவலி

விளக்கம்: எடை குறைதல், இரத்த சோகை, காய்ச்சல், கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கம் ஆகியவை காலா–அசார் நோயின் அறிகுறிகளாகும்.

83. மலேரியாவானது எந்தெந்த பிளாஸ்மோடிய இனங்களால் ஏற்படுகிறது?

A) பி. வைவாக்ஸ்

B) பி.ஓவேல்

C) பி.மலேரியே

D) இவை அனைத்தும்

விளக்கம்: மலேரியாவானது பல்வேறு வகையான பிளாஸ்மோடிய இனங்களான பி. வைவாக்ஸ் (P. vivax), பி.ஓவேல் (P. ovale), பி.மலேரியே (P. malariae) மற்றும் பி. பால்சிபாரம் (P. falciparum) ஆகியவற்றால் ஏற்படுகிறது.

84. பிளாஸ்மோடியம், டிரோபோசோயிட்டுகள் (Trophozoites) என்ற முதிர்நிலையில் மனிதனின் _____________ வாழ்கின்றன.

A) இரத்தச் வெள்ளையணுக்கள்

B) இரத்தச் தட்டைகள்

C) இரத்தச் மஜ்ஜைகள்

D) இரத்தச் சிவப்பணுக்கள்

விளக்கம்: பிளாஸ்மோடியம், டிரோபோசோயிட்டுகள் (Trophozoites) என்ற முதிர்நிலையில் மனிதனின் இரத்தச் சிவப்பணுக்களில் வாழ்கின்றன.

85. _____________ இருவிருந்தோம்பிகளைக் கொண்ட உயிரி ஆகும்.

A) பி. வைவாக்ஸ்

B) பி.ஓவேல்

C) பி.மலேரியே

D) பி. பால்சிபாரம்

விளக்கம்: பி. வைவாக்ஸ், இருவிருந்தோம்பிகளைக் (Digenic) கொண்ட உயிரி ஆகும்.

86. பிளாஸ்மோடியத்தின் வாழ்க்கை சுழற்சியில் பி. வைவாக்ஸ் எந்த நிலைகளில் காணப்படுகின்றன?

A) ஸ்போரோகோனி

B) சைஷோகோனி

C) கேமோகோனி

D) இவை அனைத்தும்

விளக்கம்: பிளாஸ்மோடியத்தின் வாழ்க்கை சுழற்சியில், சைஷோகோனி, (Schizogony) கேமோகோனி (Gamogony) மற்றும் ஸ்போரோகோனி (Sporogony) என்ற மூன்று நிலைகள் பி. வைவாக்ஸ் காணப்படுகின்றன.

87. நோய்த்தொற்று கொண்ட _____________ ஒரு மனிதனைக் கடிக்கும் போது மலேரியா ஒட்டுண்ணிகள், மனிதனின் இரத்த ஓட்டத்தினுள் நுழைகின்றன.

A) ஆண் அனாபிஸ்

B) பெண் அனாபிஸ்

C) ஆண் அனாபிலஸ்

D) பெண் அனாபிலஸ்

விளக்கம்: நோய்த்தொற்று கொண்ட பெண் அனாபிலஸ் கொசு ஒரு மனிதனைக் கடிக்கும் போது மலேரியா ஒட்டுண்ணிகள், மனிதனின் இரத்த ஓட்டத்தினுள் நுழைகின்றன.

88. கல்லீரல் செல்களில்_____________ முறையில் பெருக்கமடைந்து மீரோசோயிட்டுகளை (Merozoites) உற்பத்தி செய்கின்றன.

A) ஸ்போரோகோனி

B) சைஷோகோனி

C) கேமோகோனி

D) ஸ்மோகோனி

விளக்கம்: கல்லீரல் செல்களில், பாலிலா பலபிளவு (சைஷோகோனி) முறையில் பெருக்கமடைந்து மீரோசோயிட்டுகளை (Merozoites) உற்பத்தி செய்கின்றன.

89. கூற்று(A): இரத்தச் சிவப்பணுகளுக்குள் நுழைந்த, மீரோசோயிட்டுகள் ஒரு செல்லுடைய டிரோபோசோயிட்டுகளாக (Trophozoites) வளர்ந்து அளவில் பெரிதாகின்றன. அதன் மையத்தில் உருவான நுண்குமிழ், பெரிதாகி சைட்டோபிளாசத்தின் ஒருபுறமாக தள்ளப்படுகிறது.

காரணம்(R): இதனால் முத்திரை மோதிர நிலை உருவாகிறது.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: இரத்தச் சிவப்பணுகளுக்குள் நுழைந்த, மீரோசோயிட்டுகள் ஒரு செல்லுடைய டிரோபோசோயிட்டுகளாக (Trophozoites) வளர்ந்து அளவில் பெரிதாகின்றன. அதன் மையத்தில் உருவான நுண்குமிழ், பெரிதாகி சைட்டோபிளாசத்தின் ஒருபுறமாக தள்ளப்படுவதால் முத்திரை மோதிர நிலை (Signet ring) உருவாகின்றது.

90. பெரிய சைஷாண்டுகளில் மஞ்சள் நிறத்துடன் கூடிய பழுப்பு நிறமியான_____________ காணப்படுகின்றன.

A) சைஷாண்டு துகள்கள்

B) சைஷானரின் துகள்கள்

C) ஷுஃப்னரின் துகள்கள்

D) இவற்றில் எதுவுமில்லை

விளக்கம்: பெரிய சைஷாண்டுகளில் மஞ்சள் நிறத்துடன் கூடிய பழுப்பு நிறமியான 'ஷுஃப்னரின் துகள்கள்' (Schuffners granules) காணப்படுகின்றன.

91. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டெர்ஷியன், தீங்கற்ற டெர்ஷியன் மலேரியா வகையின் நோய்காரணி பி. மலேரியே

2] குவார்டன் மலேரியா வகையின் நோய்காரணி பி. வைவாக்ஸ்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டெர்ஷியன், தீங்கற்ற டெர்ஷியன் (அ) வைவாக்ஸ் மலேரியா வகையின் நோய்காரணி பி. வைவாக்ஸ் ஆகும். குவார்டன் மலேரியா வகையின் நோய்காரணி பி. மலேரியே ஆகும்.

92. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] மிதமான டெர்ஷியன் மலேரியா வகையின் நோய்காரணி பி. ஃபால்சிபாரம்.

2] வீரிய மிக்க டெர்ஷியன் (அ) குவாடிடியன் மலேரியா வகையின் நோய்காரணி பி. ஒவேல்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: மிதமான டெர்ஷியன் மலேரியா வகையின் நோய்காரணி பி. ஒவேல் ஆகும். வீரிய மிக்க டெர்ஷியன் (அ) குவாடிடியன் மலேரியா வகையின் நோய்காரணி பி. ஃபால்சிபாரம் ஆகும்.

93. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டெர்ஷியன், தீங்கற்ற டெர்ஷியன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 46 மணி நேரம் ஆகும்.

2] குவார்டன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 71 மணி நேரம் ஆகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டெர்ஷியன், தீங்கற்ற டெர்ஷியன் (அ) வைவாக்ஸ் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 48 மணி நேரம் ஆகும். குவார்டன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 72 மணி நேரம் ஆகும்.

94. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] மிதமான டெர்ஷியன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 72 மணி நேரம் ஆகும்.

2] வீரியமிக்க டெர்ஷியன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 48 மணி நேரம் ஆகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: மிதமான டெர்ஷியன் மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 48 மணி நேரம் ஆகும். வீரியமிக்க டெர்ஷியன் (அ) மலேரியா வகையின் சிவப்பணு சுழற்சியின் காலம் 36–48 மணி நேரம் ஆகும்.

95. _____________என்பது இரட்டைமய கருமுட்டை ஆகும்.

A) ஊசிஸ்ட்

B) ஊகைனெட்

C) ஹீமோசோயின்

D) மீரோசோயிட்டுகள்

விளக்கம்: ஊகைனெட் இரட்டைமய கருமுட்டை ஆகும்.

96. கூற்று(A): ஊசிஸ்ட்டுகள் குன்றல் பகுப்பு முறையில் பிளவுற்று ஸ்போரோசோயிட்டுகளை உருவாக்குகின்றன.

காரணம்(R): இந்நிகழ்விற்கு ஸ்போரோகோனி (Sporogony) என்று பெயர்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: ஊசிஸ்ட்டுகள் குன்றல் பகுப்பு முறையில் பிளவுற்று ஸ்போரோசோயிட்டுகளை உருவாக்குகின்றன. இந்நிகழ்விற்கு ஸ்போரோகோனி (Sporogony) என்று பெயர்.

97. மலேரியாவின் அடைகாப்புக்காலம்_____________

A) 11 நாட்கள்

B) 13 நாட்கள்

C) 14 நாட்கள்

D) 12 நாட்கள்

விளக்கம்: மலேரியாவின் அடைகாப்புக்காலம் 12 நாட்கள் ஆகும்.

98. மீரோசோயிட்டுகள், _____________ நச்சு இரத்த ஓட்டத்திற்குள் வெளியேறுவதனால் மலேரியா நோய்க்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

A) ஊசிஸ்ட்

B) ஊகைனெட்

C) ஹீமோசோயின்

D) மீரோசோயிட்டுகள்

விளக்கம்: மீரோசோயிட்டுகள், ஹீமோசோயின் (Haemozoin) நச்சு மற்றும் சிவப்பணு சிதைபொருள்கள் ஆகியவை ஒத்திசைந்து இரத்த ஓட்டத்திற்குள் வெளியேறுவதனால் மலேரியா நோய்க்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

99. _____________ எனும் பாக்டீரியாக்களைத் தெளிப்பதன் மூலம் கொசுக்களின் இளவுயிரிகளை கொல்ல முடியும்.

A) கிளாசினா மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா மெஜிஸ்டா

C) லீஷ்மேனியா மெஜிஸ்டா

D) பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்

விளக்கம்: பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் (Bacillus thuringiensis) எனும் பாக்டீரியாக்களைத் தெளிப்பதன் மூலம் கொசுக்களின் இளவுயிரிகளை கொல்ல முடியும்.

100. _____________ ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் (WHO) மலேரியா ஒழிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

A) 1951

B) 1952

C) 1953

D) 1950

விளக்கம்: 1950 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் (WHO) மலேரியா ஒழிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

101. மலேரியாவிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே தடுப்பூசி_____________

A) RTS, M

B) RTS, T

C) RTS, S

D) RTS, F

விளக்கம்: 2015 வரை மலேரியாவிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே தடுப்பூசி RTS, S (மஸ்குரிக்ஸ்) என்பதாகும்.

102. _____________ என்பது டிரைகோபைட்டான் மற்றும் எபிடெர் மோஃபைட்டா ன் ஆகிய பூஞ்சை பேரினங்களால் ஏற்படும் தோல் தொற்றாகும்.

A) மோர்சிடன்ஸ்

B) டிரையடோமா

C) லீஷ்மேனியா

D) டெர்மட்டோமைகோசிஸ்

விளக்கம்: டெர்மட்டோமைகோசிஸ் (Dermatomycosis) என்பது டிரைகோபைட்டான் (Trichophyton), மைக்ரோஸ்போரம் (Microsporum) மற்றும் எபிடெர்மோஃபைட்டான் (Epidermophyton) ஆகிய பூஞ்சை பேரினங்களால் ஏற்படும் தோல் தொற்றாகும்.

103. பாதங்களில் ஏற்படும் படர் தாமரை_____________ எனும் பூஞ்சையால் ஏற்படுகிறது.

A) டிரைகோபைட்டான்

B) மைக்ரோஸ்போரம்

C) எபிடெர்மோஃபைட்டான்

D) டினியா பெடிஸ்

விளக்கம்: பாதங்களில் ஏற்படும் படர் தாமரையான சேற்றுப்புண் (Athlete's foot) டினியா பெடிஸ் (Tinea pedis) எனும் பூஞ்சையால் ஏற்படுகிறது.

104. _____________ என்பது ஒற்றை விருந்தோம்பியை (monogenic) கொண்ட ஒட்டுண்ணி ஆகும்.

A) அமீபியாசிஸ்

B) உருளைப்புழு

C) அஸ்காரிஸ்

D) பெடிஸ்

விளக்கம்: அஸ்காரிஸ் என்பது ஒற்றை விருந்தோம்பியை (monogenic) கொண்ட ஒட்டுண்ணி ஆகும்.

105. உருளைப்புழு நோய்_____________ புழுக்களால் உண்டாகிறது.

A) அஸ்காரிஸ்லும்பிரிகாய்ட்ஸ்

B) மைக்ரோஸ்போரம்

C) எபிடெர்மோஃபைட்டான்

D) டினியா பெடிஸ்

விளக்கம்: குடலில் அக ஒட்டுண்ணிகளாக வாழும் அஸ்காரிஸ்லும்பிரிகாய்ட்ஸ் (Ascaris lumbricoides) புழுக்களால் உருளைப்புழு நோய் உண்டாகிறது. இவை பொதுவாக உருளைப்புழுக்கள் (Round worm) என்றழைக்கப்படுகின்றன.

106. உருளைப்புழு நோயின் அறிகுறிகள் யாவை?

A) வயிற்று வலி

B) வாந்தி

C) இரத்த சோகை

D) இவை அனைத்தும்

விளக்கம்: வயிற்று வலி, வாந்தி, தலைவலி, இரத்த சோகை, எரிச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை உருளைப்புழு நோயின் அறிகுறிகளாகும்.

107. யானைக்கால்நோய்_____________ ஒட்டுண்ணியால் உண்டாகிறது.

A) அஸ்காரிஸ்லும்பிரிகாய்ட்ஸ்

B) மைக்ரோஸ்போரம்

C) உச்சரீரியா பான்கிராஃப்டி

D) டினியா பெடிஸ்

விளக்கம்: யானைக்கால் புழு (Filarial worm) என்று பொதுவாக அழைக்கப்படும் உச்சரீரியா பான்கிராஃப்டி (Wuchereria bancrofti) எனும் ஒட்டுண்ணியால் யானைக்கால்நோய் உண்டாகிறது.

108. யானைக்கால் புழுவின் வாழ்க்கைச் சுழற்சி, மனிதன் மற்றும்______________ கொசு என்ற இரு விருந்தோம்பிகளைக் கொண்டு நிறைவடைகிறது.

A) ஆண் கியுலக்ஸ்

B) பெண் கியுலக்ஸ்

C) ஆண் அனாபிலஸ்

D) பெண் அனாபிலஸ்

விளக்கம்: யானைக்கால் புழுவின் வாழ்க்கைச் சுழற்சி, மனிதன் மற்றும் பெண் கியுலக்ஸ் கொசு என்ற இரு விருந்தோம்பிகளைக் கொண்டு நிறைவடைகிறது.

109. பெண்யானைக்கால்புழுவால்______________ லார்வாக்கள் எனப்படும் இளம் உயிரிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

A) மைக்ரோபைலேரியே

B) மைக்ரோஸ்போரம்

C) உச்சரீரியா பான்கிராஃப்டி

D) டினியா பெடிஸ்

விளக்கம்: பெண்யானைக்கால்புழுவால் மைக்ரோபைலேரியே லார்வாக்கள் எனப்படும் இளம் உயிரிகள் (Juvenile) தோற்றுவிக்கப்படுகின்றன.

110. தொற்றுள்ள உணவு மற்றும் நீரின் மூலம் பரவும் நோய்கள் யாவை?

A) டைஃபாய்டு

B) அமீபியாசிஸ்

C) உருளைப்புழு நோய்

D) இவை அனைத்தும்

விளக்கம்: டைஃபாய்டு, அமீபியாசிஸ் மற்றும் உருளைப்புழு நோய் போன்ற பல்வேறு தொற்று நோய்கள், தொற்றுள்ள உணவு மற்றும் நீரின் மூலம் பரவுகின்றன.

111. ______________ என்பது நோய்த்தடைக்காப்பு மண்டலத்தைப் பற்றிய படிப்பாகும்.

A) தடைகாப்பியல்

B) நோய்த்தடையியல்

C) நோய்த்தடைகாப்பியல்

D) நோய்யியல்

விளக்கம்: நோய்த்தடைகாப்பியல் என்பது நோய்த்தடைக்காப்பு மண்டலத்தைப் பற்றிய படிப்பாகும்.

112. கூற்று(A): உடலுக்குள் அயல்பொருளாக நுழையும் சூழ்நிலை முகவர்களிடமிருந்து, உடலை பாதுகாக்க உடல் பயன்படுத்தும் அனைத்து செயல்முறைகளையும் குறிக்கிறது.

காரணம்(R): இம்மண்டலம் நோய்த்தடைக்காப்பு மண்டலம் எனப்படும்

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: உடலுக்குள் அயல்பொருளாக நுழையும் சூழ்நிலை முகவர்களிடமிருந்து, உடலை பாதுகாக்க உடல் பயன்படுத்தும் அனைத்து செயல்முறைகளையும் நோய்த்தடைக்காப்பு மண்டலம் குறிக்கிறது.

113. _____________ என்பது நல்ல உடல்நலத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

A) ஆரோக்கியம்

B) பராமரிப்பு

C) சுகாதாரம்

D) பாதுகாப்பு

விளக்கம்: சுகாதாரம் என்பது நல்ல உடல்நலத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

114. சுகாதாரம் என்பது "உடல்நலத்தைப்பராமரிக்கவும் நோய்கள் பரவுவதை தடுக்கவும் உதவும் சூழ்நிலைகள் மற்றும் நடவடிக்கைகள்" என்பது யாரின் கூற்றாகும்?

A) UNICEF

B) UNFAO

C) WHO

D) FAAO

விளக்கம்: உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) படி சுகாதாரம் என்பது "உடல்நலத்தைப்பராமரிக்கவும் நோய்கள் பரவுவதை தடுக்கவும் உதவும் சூழ்நிலைகள் மற்றும் நடவடிக்கைகள்" ஆகும்.

115. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] நோயை உண்டாக்கும் நோயூக்கிகளுக்கு எதிரான உடலின் ஒட்டுமொத்த செயல்திறனேயே நோய்த்தடைகாப்பு என்றழைக்கப்படுகிறது.

2] நோய்த்தடுப்பு என்பது அதிக இலக்கு திறன் கொண்டதாகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: நோயை உண்டாக்கும் நோயூக்கிகளுக்கு எதிரான உடலின் ஒட்டுமொத்த செயல்திறனேயே நோய்த்தடைகாப்பு என்றழைக்கப்படுகிறது. இதற்கு நோய் எதிர்ப்பு என்றும் பெயருண்டு. இத்தன்மை குறைவிற்கு, எளிதில் இலக்காகும் தன்மை என்று பெயர். நோய்த்தடுப்பு என்பது அதிக இலக்கு திறன் கொண்டதாகும்.

116. தடைக்காப்பு துலங்கலை ஏற்படுத்தும் திறன் பெற்ற எந்தவொரு பொருளும், _____________ என அழைக்கப்படுகிறது

A) நேர் பொருள் தூண்டி

B) எதிர்ப்பொருள் தூண்டி

C) ஆன்டிபாடி

D) இவற்றில் எதுவுமில்லை

விளக்கம்: தடைக்காப்பு துலங்கலை ஏற்படுத்தும் திறன் பெற்ற எந்தவொரு பொருளும், எதிர்ப்பொருள் தூண்டி (Antigen) என அழைக்கப்படுகிறது.

117. ஆன்டிஜென் என்பதில் அன்டி–உடல் ஜென் என்பது _____________

A) தடை

B) பாதுகாப்பு

C) பெருக்கிகள்

D) தூண்டிகள்

விளக்கம்: ஆன்டிஜென் என்பதில் (அன்டி–உடல் ஜென்– தூண்டிகள்).

118. உயிரினங்களில் இயற்கையாகவே காணப்படும், தொற்றுக்கு எதிரான நோய்த்தடுக்கும் ஆற்றல்_____________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செல்வழி நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: இயல்பு நோய்த்தடைகாப்பு உயிரினங்களில் இயற்கையாகவே காணப்படும், தொற்றுக்கு எதிரான நோய்த்தடுக்கும் ஆற்றலாகும்.

119. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இயல்பு நோய்த்தடைக்காப்பு இலக்கு அற்றதாகும்.

2] இயல்பு நோய்த்தடைக்காப்பு பரந்தஅளவிலான திறன் கொண்ட நோய்த்தொற்று முகவர்களுக்கு எதிராக செயல்படுகின்றது.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இயல்பு நோய்த்தடைக்காப்பு இலக்கு அற்றதாகும். இது பரந்தஅளவிலான திறன் கொண்ட நோய்த்தொற்று முகவர்களுக்கு எதிராக செயல்படுகின்றது.

120. இலக்கு தன்மையற்ற நோய்த்தடைக்காப்பு என்பது _____________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செல்வழி நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: இயல்பு நோய்த்தடைக்காப்பை இலக்கு தன்மையற்ற நோய்த்தடைக்காப்பு அல்லது இயற்கையான நோய்த்தடைகாப்பு எனக் கூறலாம்.

121. _____________ பாக்டீரியாவின் செல்சுவரைத் தகர்க்கின்றன.

A) ரைசோசைம்

B) லைசோசைம்

C) இன்டர்ஃபெரான்கள்

D) டையபீடெசிஸ்

விளக்கம்: லைசோசைம் பாக்டீரியாவின் எதிர்ப்புக் காரணியாக செயல்பட்டு பாக்டீரியாவின் செல்சுவரைத் தகர்க்கின்றன.

122. _____________ தொற்றில்லா செல்களில் வைரஸ் எதிர்ப்பை தூண்டுகின்றன.

A) ரைசோசைம்

B) லைசோசைம்

C) இன்டர்ஃபெரான்கள்

D) டையபீடெசிஸ்

விளக்கம்: இன்டர்ஃபெரான்கள் தொற்றில்லா செல்களில் வைரஸ் எதிர்ப்பை தூண்டுகின்றன.

123. வெள்ளையணுக்களால் உருவாக்கப்படும்_____________ நோயூக்கி நுண்கிருமிகளை சிதைக்கின்றன.

A) நிரப்புப் பொருட்கள்

B) லைசோசைம்

C) இன்டர்ஃபெரான்கள்

D) டையபீடெசிஸ்

விளக்கம்: வெள்ளையணுக்களால் உருவாக்கப்படும் நிரப்புப் பொருட்கள் நோயூக்கி நுண்கிருமிகளை சிதைக்கின்றன அல்லது செல்விழுங்குதலை எளிதாக்குகின்றன.

124. கூற்று(A): காயம் மற்றும் நோய்கிருமிகளால் இரத்த கசிவு ஏற்படுகின்ற போது, அப்பகுதியில் செரோட்டோனின், ஹிஸ்டமைன் மற்றும் புரோஸ்டோகிளான்டின் ஆகிய வேதிய சமிக்ஞைப் பொருள்களை கொண்டுள்ள இரத்தம் வெளியேறுகிறது.

காரணம்(R): இந்நிகழ்வு இரத்தகுழாய்சுவர் வழி இரத்தபொருள் வெளியேறுதல் என்று பெயர்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: காயம் மற்றும் நோய்கிருமிகளால் இரத்த கசிவு ஏற்படுகின்ற போது, அப்பகுதியில் செரோட்டோனின், ஹிஸ்டமைன் மற்றும் புரோஸ்டோகிளான்டின் ஆகிய வேதிய சமிக்கைப் பொருள்களை கொண்டுள்ள இரத்தம் வெளியேறுகிறது. இப்பொருட்கள் விழுங்கு செல்களை பாதிக்கப்பட்ட பகுதிக்கு உட்செலுத்துகின்றன. இந்நிகழ்வு இரத்தகுழாய்சுவர் வழி இரத்தபொருள் வெளியேறுதல் என்று பெயர்.

125. இரத்தகுழாய்சுவர் வழி இரத்தபொருள் வெளியேறுதல்_____________எனவும் அழைக்கப்படுகின்றன.

A) நிரப்புப் பொருட்கள்

B) லைசோசைம்

C) இன்டர்ஃபெரான்கள்

D) டையபீடெசிஸ்

விளக்கம்: இரத்தகுழாய்சுவர் வழி இரத்தபொருள் வெளியேறுதல் அல்லது டையபீடெசிஸ் (Diapedesis) என்று பெயர்.

126. வயிற்று சுரப்பிகள் சுரக்கும் அமிலம்_____________

A) Nacl

B) HCl

C) HClO

D) HBr

விளக்கம்: வயிற்று சுரப்பிகள் சுரக்கும் அமிலம் (HCl) நாம் உட்கொள்ளும் உணவோடு சேர்ந்து வரும் நுண்ணுயிரிகளை கொல்கிறது.

127. தோலின் அமிலச்சூழல்_____________ நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை குறைக்கிறது.

A) pH 2–5

B) pH 3–5

C) pH 4–5

D) pH 3–4

விளக்கம்: உடலின் உள்ளே நுழையும் நுண்ணுயிரிகளை தடுக்கிறது – தோலின் அமிலச்சூழல் (pH 3–5) நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை குறைக்கிறது.

128. ஒரு உயிரினம், பிறந்த பிறகு, தன் வாழ்நாளில் பெறும் நோய்த்தடைகாப்பு என்பது _____________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செல்வழி நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: ஒரு உயிரினம், பிறந்த பிறகு, தன் வாழ்நாளில் பெறும் நோய்த்தடைகாப்பே பெறப்பட்ட நோய்த் தடைகாப்பு எனப்படும். மேலும் இது, ஒரு குறிப்பிட்ட நுண்கிருமிக்கு எதிரான உடல் எதிர்ப்புத் திறன் ஆகும்.

129. பெறப்பட்ட நோய்த்தடைகாப்பின் சிறப்புப் பண்புகள் யாவை?

A) பல்வகைமைத் தன்மை

B) சுய மற்றும் அயல் மூலக்கூறுகளைக் கண்டறிதல்

C) நோய்த்தடைகாப்பு சார்ந்த நினைவாற்றல்

D) இவை அனைத்தும்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டி குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் தன்மை, பல்வகைமைத் தன்மை, சுய மற்றும் அயல் மூலக்கூறுகளைக் கண்டறிதல் மற்றும் நோய்த்தடைகாப்பு சார்ந்த நினைவாற்றல் ஆகியவை பெறப்பட்ட நோய்த்தடைகாப்பின் சிறப்புப் பண்புகளாகும்.

130. எதிர்ப்பொருள்களின் உதவியின்றி, செல்களினாலேயே நோயூக்கிகள் அழிக்கப்படுவது______________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செல்வழி நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: எதிர்ப்பொருள்களின் உதவியின்றி, செல்களினாலேயே நோயூக்கிகள் அழிக்கப்படுவது செல்வழி நோய்த் தடைகாப்பு எனப்படும்.

131. செல்வழி நோய்த்தடைகாப்பிற்க்கு______________ உதவிபுரிகின்றன.

A) இயற்கைக் கொல்லி செல்கள்

B) T– செல்கள்

C) மேக்ரோஃபேஜ்கள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: செல்வழி நோய்த்தடைகாப்பிற்க்கு T– செல்கள் மேக்ரோஃபேஜ்கள் மற்றும் இயற்கைக் கொல்லி செல்கள் ஆகியவை உதவிபுரிகின்றன.

132. எதிர்ப்பொருட்களை உற்பத்தி செய்து அதன் வழியாக நோயூக்கிகளை அழிக்கும் முறை______________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செல்வழி நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: எதிர்ப்பொருட்களை உற்பத்தி செய்து அதன் வழியாக நோயூக்கிகளை அழிக்கும் முறைக்கு எதிர்ப்பொருள்வழி நோய்த்தடைகாப்பு அல்லது திரவவழி நோய்த்தடைகாப்பு என்று பெயர்.

133. எதிர்ப்பொருள் தூண்டிகளை முன்னிலைபடுத்தும் செல்கள் மற்றும் T–உதவி செல்கள் ஆகியவற்றின் துணையோடு_____________ திரவவழி நோய்த்தடைகாப்பை செயலாக்குகின்றன.

A) S–செல்கள்

B) P–செல்கள்

C) B–செல்கள்

D) b–செல்கள்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டிகளை முன்னிலைபடுத்தும் செல்கள் (Antigen presenting cells) மற்றும் T–உதவி செல்கள் ஆகியவற்றின் துணையோடு B–செல்கள் திரவவழி நோய்த்தடைகாப்பை செயலாக்குகின்றன.

134. எதிர்ப்பொருள் உற்பத்தி, _____________ சிறப்புப் பண்பாகும்.

A) ஊர்வன

B) பாலூட்டிகள்

C) முதுகெலும்பற்றவை

D) முதுகெலும்பிகள்

விளக்கம்: எதிர்ப்பொருள் உற்பத்தி, முதுகெலும்பிகளின் சிறப்புப் பண்பாகும்.

135. உடலில், எதிர்பொருளை உருவாக்குவதன் மூலம் ஏற்படும் நோய்த்தடைகாப்பு_____________

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: உடலில், எதிர்பொருளை உருவாக்குவதன் மூலம் ஏற்படும் நோய்த்தடைகாப்பு சார்ந்த எதிர்ப்புத் திறனே செயலாக்க நோய்த் தடைகாப்பாகும்.

136. _____________ ஒரு நோய்த்தொற்று அல்லது தடுப்பூசி போடுவதன் விளைவாக உருவாகிறது.

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: செயலாக்க நோய்த்தடைகாப்பு ஒரு நோய்த்தொற்று அல்லது தடுப்பூசி போடுவதன் விளைவாக உருவாகிறது.

137. _____________ நினைவாற்றல் செல்களின் தோற்றத்திற்கு வழி வகுக்கிறது.

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: செயலாக்க நோய்த்தடைகாப்பு நினைவாற்றல் செல்களின் தோற்றத்திற்கு வழி வகுக்கிறது.

138. கூற்று(A): புறச்சூழலிலிருந்து எதிர்பொருட்கள் உயிரிக்குள் செலுத்தப்படுகின்றன.

காரணம்(R): இத்தடைக்காப்பு மந்தமான நோய்த்தடைகாப்பு எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டிகளுக்கு எதிராக எதிர்ப்பொருள் உற்பத்தி அவசியமில்லை. புறச்சூழலிலிருந்து எதிர்பொருட்கள் உயிரிக்குள் செலுத்தப்படுகின்றன. இத்தடைக்காப்பு மந்தமான நோய்த்தடைகாப்பு எனப்படும்.

139. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு என கண்டறிக?

1] தடை காப்பு பொருட்கள் (எதிர்ப்பொருட்கள்) விருந்தோம்பியின் உடலில் உருவாக்கப்படுகின்றன.

2] நுண்கிருமி அல்லது எதிர்பொருள் தூண்டிகளின் தூண்டுதலால் இவை உருவாக்கப்படுகின்றது.

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: செயலாக்க நோய்த்தடைக்காப்பில் தடை காப்பு பொருட்கள் (எதிர்ப்பொருட்கள்) விருந்தோம்பியின் உடலில் உருவாக்கப்படுகின்றன. நுண்கிருமி அல்லது எதிர்பொருள் தூண்டிகளின் தூண்டுதலால் இவை உருவாக்கப்படுகின்றது.

140. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு என கண்டறிக?

1] தடைகாப்பியல் நினைவாற்றலைப் பெற்றுள்ளது.

2] நோய்த்தடைக்காப்பு சிறிது காலத்திற்கு பிறகு தான் செயல்திறன் உடையதாக மாறும்.

A) பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: செயலாக்க நோய்த்தடைகாப்பியல் நினைவாற்றலைப் பெற்றுள்ளது. நோய்த்தடைக்காப்பு சிறிது காலத்திற்கு பிறகு தான் செயல்திறன் உடையதாக மாறும்.

141. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு என கண்டறிக?

1] டைகாப்பு பொருட்கள் விருந்தோம்பியின் உடலில் உருவாக்கப்படுவதில்லை.

2] வெளியில் இருந்து பெற்ற எதிர்ப்பொருட்களால் உற்பத்தியாகின்றன.

A) மந்தமான நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: மந்தமான நோய்த்தடைக்காப்பில் தடைகாப்பு பொருட்கள் (எதிர்பொருட்கள்) விருந்தோம்பியின் உடலில் உருவாக்கப்படுவதில்லை. மாறாக பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதில் விருந்தோம்பியின் பங்களிப்பு கிடையாது. வெளியில் இருந்து பெற்ற எதிர்ப்பொருட்களால் உற்பத்தியாகின்றன.

142. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு என கண்டறிக?

1] நோய்த்தடைகாப்பியல் நினைவாற்றல் இல்லை.

2] நோய்த்தடைக்காப்பில், உடனே நோய்த்தடைகாப்பு உருவாகிறது.

A) மந்தமான நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: மந்தமான நோய்த்தடைகாப்பியல் நினைவாற்றல் இல்லை. இவ்வகை நோய்த்தடைக்காப்பில், உடனே நோய்த்தடைகாப்பு உருவாகிறது.

143. _____________ நிலையற்ற மற்றும் குறைந்த பாதுகாப்பை அளிக்கிறது.

A) மந்தமான நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: மந்தமான நோய்த்தடைகாப்பியல் நிலையற்ற மற்றும் குறைந்த பாதுகாப்பை அளிக்கிறது.

144. _____________ நீடித்த மற்றும் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

A) மந்தமான நோய்த்தடைகாப்பு

B) இயல்பு நோய்த்தடைகாப்பு

C) செயலாக்க நோய்த்தடைகாப்பு

D) திரவவழி நோய்த்தடைகாப்பு

விளக்கம்: செயலாக்க நோய்த்தடைகாப்பியல் நீடித்த மற்றும் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

145. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு துலங்கல்கள் என கண்டறிக?

1] ஒரு எதிர்ப்பொருள் தூண்டி முதன் முதலாக நோய்தடைக்காப்பு அமைப்புடன் தொடர்புக் கொள்வதால் இவை உருவாகின்றன.

2] இவ்வகை நோய்தடைக்காப்பு உருவாக நீண்ட நேரம் தேவைப்படுகிறது.

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: முதல்நிலை தடைக்காப்பு துலங்கலில் ஒரு எதிர்ப்பொருள் தூண்டி முதன் முதலாக நோய்தடைக்காப்பு அமைப்புடன் தொடர்புக் கொள்வதால் இவை உருவாகின்றன. இவ்வகை நோய்தடைக்காப்பு உருவாக நீண்ட நேரம் தேவைப்படுகிறது.

146. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு துலங்கல்கள் என கண்டறிக?

1] எதிர்ப்பொருள் அளவு விரைவாக வீழ்ச்சியடைகிறது.

2] நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலால் வெளிப்படுத்தப்படுகிறது.

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: முதல்நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருள் அளவு விரைவாக வீழ்ச்சியடைகிறது. நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலால் வெளிப்படுத்தப்படுகிறது.

147. முதல்நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருளின் செறிவு_____________ முதல்_____________ நாட்களில் உச்ச நிலையை அடைகிறது.

A) 8 முதல் 11

B) 9 முதல் 10

C) 7 முதல் 10

D) 8 முதல் 12

விளக்கம்: முதல்நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருளின் செறிவு 7 முதல் 10 நாட்களில் உச்ச நிலையை அடைகிறது.

148. இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருளின் செறிவு_____________ முதல்_____________ நாட்களில் உச்ச நிலையை அடைகிறது.

A) 3 முதல் 7

B) 3 முதல் 10

C) 3 முதல் 5

D) 3 முதல் 12

விளக்கம்: இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருளின் செறிவு 3 முதல் 5 நாட்களில் உச்ச நிலையை அடைகிறது.

149. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு துலங்கல்கள் என கண்டறிக?

1] முதல் நிலையில் சந்தித்த அதே எதிர்ப்பொருள் தூண்டியை இரண்டா வது அல்லது அடுத்தடுத்து எதிர்கொள்ளும் போது உருவாகிறது.

2] இவ்வகை நோய்தடைக்காப்பு உருவாக குறைவான நேரமே போதுமானது.

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: முதல் நிலையில் சந்தித்த அதே எதிர்ப்பொருள் தூண்டியை இரண்டா வது அல்லது அடுத்தடுத்து எதிர்கொள்ளும் போது இரண்டாம் நிலை தடைக்காப்பு உருவாகிறது. இவ்வகை நோய்தடைக்காப்பு உருவாக குறைவான நேரமே போதுமானது.

150. கீழ்க்கண்டவை எவ்வகையான தடைக்காப்பு துலங்கல்கள் என கண்டறிக?

1] எதிர்ப்பொருளின் அளவு நீண்ட காலம் உயர் நிலையில் உள்ளது.

2] எலும்புமஜ்ஜை அதனை தொடர்ந்து நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலால் வெளிப்படுத்தப்படுகிறது.

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கலில் எதிர்ப்பொருளின் அளவு நீண்ட காலம் உயர் நிலையில் உள்ளது. எலும்புமஜ்ஜை அதனை தொடர்ந்து நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலால் வெளிப்படுத்தப்படுகிறது.

151. எதிர்பொருள் தூண்டியை இனம் காணுதல் எந்த துலங்கலில் காணப்படுகின்றது?

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: எதிர்பொருள் தூண்டியை இனம் காணுதல், அதற்கு எதிரான எதிர்ப்பொருளை உற்பத்தி செய்தல் மற்றும் இறுதியாக நினைவாற்றல் லிம்போசைட்டுகளை உருவாக்குதல் ஆகியவற்றை முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள் அறிந்து கொள்கிறது.

152. ஊக்கி துலங்கல் என அழைக்கப்படுவது_____________

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: முதல்நிலைத் துலங்கலை விட அதிக அளவை அடைகிறது. எனவே இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கலை ஊக்கி துலங்கல் (Booster response) எனவும் அழைக்கலாம்.

153. எலும்பு மஜ்ஜையில் இரத்த செல்கள் உருவாகும் செயல்முறைகள்_____________ என அழைக்கப்படுகிறது.

A) ரைசோசைம்

B) லைசோசைம்

C) ஹீமாட்டோபாயசிஸ்

D) டையபீடெசிஸ்

விளக்கம்: எலும்பு மஜ்ஜையில் இரத்த செல்கள் உருவாகும் செயல்முறைகள் ஹீமாட்டோபாயசிஸ் (Haematopoiesis) என அழைக்கப்படுகிறது.

154. லிம்போசைட்டுகளின் தோற்றம், முதிர்ச்சி மற்றும் பெருக்கம் ஆகியவற்றில் பங்கேற்கும் உறுப்புகள்_____________

A) இனப்பெருக்க உறுப்புகள்

B) உடல பெருக்க உறுப்புகள்

C) இரத்தநாள உறுப்புகள்

D) நிணநீரிய உறுப்புகள்

விளக்கம்: லிம்போசைட்டுகளின் தோற்றம், முதிர்ச்சி மற்றும் பெருக்கம் ஆகியவற்றில் பங்கேற்கும் உறுப்புகள் நிணநீரிய உறுப்புகள் என அழைக்கப்படுகின்றன.

155. லிம்போசைட்களின் முதிர்ச்சிக்கு தேவையான சூழலை வழங்குவது_____________

A) முதல்நிலை நீணநீரிய உறுப்புகள்

B) இரண்டாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

C) மூன்றாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

D) நான்காம் நிலை நீணநீரிய உறுப்புகள்

விளக்கம்: முதல்நிலை நிணநீரிய உறுப்புகள் லிம்போசைட்களின் முதிர்ச்சிக்கு தேவையான சூழலை வழங்குகிறது.

156. எதிர்ப்பொருள் தூண்டிகளை பிடித்து அவற்றை முதிர்ந்த லிம்போசைட்டுகளுடன் சேர்ப்பது_____________

A) முதல்நிலை நீணநீரிய உறுப்புகள்

B) இரண்டாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

C) மூன்றாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

D) நான்காம் நிலை நீணநீரிய உறுப்புகள்

விளக்கம்: இரண்டாம் நிலை நிணநீரிய உறுப்புகள் எதிர்ப்பொருள் தூண்டிகளை பிடித்து அவற்றை முதிர்ந்த லிம்போசைட்டுகளுடன் சேர்க்கின்றன.

157. கீழ்க்கண்டவற்றுள் முதல்நிலை நிணநீரிய உறுப்புள் யாவை?

A) பறவைகளின் ஃபேப்ரீசியஸ் பை

B) பாலூட்டிகளில் எலும்பு மஜ்ஜை

C) தைமஸ் சுரப்பி

D) இவை அனைத்தும்

விளக்கம்: பறவைகளின் ஃபேப்ரீசியஸ் பை, பாலூட்டிகளில் எலும்பு மஜ்ஜை மற்றும் தைமஸ் சுரப்பி போன்றவை முதல்நிலை நிணநீரிய உறுப்புகளாகும்.

158. B லிம்போசைட்டுகள் _____________ ல் முதிர்ச்சியடைந்து திரவழி நோய்தடைக்காப்பில் ஈடுபடுகின்றன.

A) பறவைகளின் ஃபேப்ரீசியஸ் பை

B) பாலூட்டிகளில் எலும்பு மஜ்ஜை

C) தைமஸ் சுரப்பி

விளக்கம்: B லிம்போசைட்டுகள் பேப்ரீசியஸ் பையில் முதிர்ச்சியடைந்து திரவழி நோய்தடைக்காப்பில் ஈடுபடுகின்றன.

159. _____________ உறுப்புகளில் முதிர்ச்சியடைந்த லிம்போசைட் செல்கள் மட்டுமே நோய்தடைக்காப்பு திறன் பெற்ற செல்களாகின்றன

A) முதல்நிலை நீணநீரிய உறுப்புகள்

B) இரண்டாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

C) மூன்றாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

D) நான்காம் நிலை நீணநீரிய உறுப்புகள்

விளக்கம்: முதல்நிலை நிணநீரிய உறுப்புகளில் முதிர்ச்சியடைந்த லிம்போசைட் செல்கள் மட்டுமே நோய்தடைக்காப்பு திறன் பெற்ற செல்களாகின்றன.

160. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] பாலூட்டிகளில் B– செல்களின் முதிர்ச்சி தைமஸில் நடைபெறுகின்றன.

2] பாலூட்டிகளில் T– செல்களின் முதிர்ச்சிஎலும்பு மஜ்ஜையி ல் நடைபெறுகின்றன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: பாலூட்டிகளில் B– செல்களின் முதிர்ச்சி எலும்பு மஜ்ஜையிலும் மற்றும் T– செல்களின் முதிர்ச்சி தைமஸிலும் நடைபெறுகின்றன.

161. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] தைமஸின் ஒவ்வொரு நுண்கதுப்பும் மெடுல்லா என்னும் புற அடுக்கை கொண்டுள்ளன.

2] தைமஸின் ஒவ்வொரு நுண்கதுப்பும் கார்டெக்ஸ் என்னும் அக அடுக்கையும் கொண்டுள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: தைமஸின் ஒவ்வொரு நுண்கதுப்பும் கார்டெக்ஸ் என்னும் புற அடுக்கையும் மெடுல்லா என்னும் அக அடுக்கையும் கொண்டுள்ளன.

162. _____________ பகுதியில் தைமோசைட்டுகள் என்னும் முதிர்ச்சியடையாத T செல்கள் அடர்ந்து காணப்படுகின்றன.

A) மெடுல்லா

B) கார்டெக்ஸ்

C) தைமோசின்

D) கார்டுல்லா

விளக்கம்: கார்டெக்ஸ் பகுதியில் தைமோசைட்டுகள் என்னும் முதிர்ச்சியடையாத T செல்கள் அடர்ந்து காணப்படுகின்றன.

163. _____________ குறைந்த அளவிலான முதிர்ச்சியடைந்த தைமோசைட்டுகள் காணப்படுகின்றன.

A) மெடுல்லா

B) கார்டெக்ஸ்

C) தைமோசின்

D) கார்டுல்லா

விளக்கம்: மெடுல்லாவில் குறைந்த அளவிலான முதிர்ச்சியடைந்த தைமோசைட்டுகள் காணப்படுகின்றன.

164. தைமஸிலிருந்து_____________ என்னும் மிக முக்கிய ஹார்மோன் உற்பத்தியாகிறது.

A) மெடுல்லா

B) கார்டெக்ஸ்

C) தைமோசின்

D) கார்டுல்லா

விளக்கம்: தைமஸிலிருந்து தைமோசின் என்னும் மிக முக்கிய ஹார்மோன் உற்பத்தியாகிறது.

165. எலும்பு மஜ்ஜையில் காணப்படும் தண்டு செல்கள்_____________ என அழைக்கப்படுகின்றன.

A) மஜ்ஜை செல்கள்

B) எலும்பு செல்கள்

C) இரத்த செல்கள்

D) குருதியாக்க செல்கள்

விளக்கம்: எலும்பு மஜ்ஜையில் காணப்படும் தண்டு செல்கள் (Stem cells), குருதியாக்க செல்கள் (Haematopoietic cells) என அழைக்கப்படுகின்றன.

166. _____________ ஒரு நிணநீரிய திசுவாகும்.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: எலும்பு மஜ்ஜை ஒரு நிணநீரிய திசுவாகும்.

167. வேறுபாடு அடைந்து பல்வேறு இரத்த செல்களாக மாறுகின்ற திறன் கொண்டவை_____________

A) மஜ்ஜை செல்கள்

B) எலும்பு செல்கள்

C) இரத்த செல்கள்

D) குருதியாக்க செல்கள்

விளக்கம்: எலும்பு மஜ்ஜையில் காணப்படும் தண்டு செல்கள் (Stem cells), குருதியாக்க செல்கள் (Haematopoietic cells) என அழைக்கப்படுகின்றன. இச்செல்கள் செல்பிரிதல் மூலம் பல்கி பெருகும் ஆற்றலைக் கொண்டுள்ளன. மேலும் இவை தண்டுச் செல்களாகவே நீடிக்கின்றன அல்லது வேறுபாடு அடைந்து பல்வேறு இரத்த செல்களாக மாறுகின்ற திறன் கொண்டவையாக உள்ளன.

168. மைய நிணநீரிய உறுப்புகள்_____________

A) முதல்நிலை நீணநீரிய உறுப்புகள்

B) இரண்டாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

C) மூன்றாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

D) நான்காம் நிலை நீணநீரிய உறுப்புகள்

விளக்கம்: முதல்நிலை அல்லது மைய நிணநீரிய உறுப்புகள் என அழைக்கப்படுகின்றன.

169. புற அமைப்பு நீணநீரிய உறுப்புகள்_____________

A) முதல்நிலை நீணநீரிய உறுப்புகள்

B) இரண்டாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

C) மூன்றாம் நிலை நீணநீரிய உறுப்புகள்

D) நான்காம் நிலை நீணநீரிய உறுப்புகள்

விளக்கம்: இரண்டாம் நிலை அல்லது புற அமைப்பு நீணநீரிய உறுப்புகள் என அழைக்கப்படுகின்றன.

170. இரண்டாம் நிலை நிணநீரிய உறுப்புகளுக்கு எடுத்துகாட்டுகள் அல்லாதவை யாவை?

A) மண்ணீரல்

B) நிணநீர் முடிச்சுகள்

C) குடல்வால்

D) கல்லீரல்

விளக்கம்: மண்ணீரல், நிணநீர் முடிச்சுகள், குடல்வால், வயிற்றுக்குடல் பாதையில் உள்ள பேயர் திட்டுகள், டான்சில்கள், அடினாய்டுகள், MALT (கோழை படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்) GALT (குடல் சார்ந்த நிணநீரிய திசுக்கள்) BALT (மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரிய திசுக்கள்) போன்றவை இரண்டாம் நிலை நிணநீரிய உறுப்புகளுக்கு எடுத்துகாட்டுகளாகும்.

171. _____________ திசு இடைவெளியில் நுழைகின்ற எதிர்ப்பொருள் தூண்டியை அழிக்கின்ற முதல் அமைப்பாகும்.

A) மண்ணீரல்

B) நிணநீர் முடிச்சுகள்

C) குடல்வால்

D) அடினாய்டுகள்

விளக்கம்: நிணநீர் முடிச்சு திசு இடைவெளியில் நுழைகின்ற எதிர்ப்பொருள் தூண்டியை அழிக்கின்ற முதல் அமைப்பாகும்.

172. _____________ மற்றும் லிம்போசைட்டுகள் போன்ற வெள்ளையனுக்களால் நிணநீர் முடிச்சு நிரம்பியுள்ளது.

A) டென்டிரைட்டிக் செல்கள்

B) B செல்கள்

C) T செல்கள்

D) மாக்ரோஃபேஜ்கள்

விளக்கம்: மாக்ரோஃபேஜ்கள் மற்றும் லிம்போசைட்டுகள் போன்ற வெள்ளையனுக்களால் நிணநீர் முடிச்சு நிரம்பியுள்ளது.

173. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] நிணநீர் முடிச்சு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஒரு பகுதி அல்ல.

2] நிணநீர் என்பது தெளிவான ஒளி ஊடுருவக்கூடிய, நிறமற்ற, ஓடக்கூடிய மற்றும் செல்லுக்கு வெளியே காணப்படும் திரவ இணைப்பு திசுவாகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: நிணநீர் முடிச்சு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஒரு பகுதியாகும். நிணநீர் என்பது தெளிவான ஒளி ஊடுருவக்கூடிய, நிறமற்ற, ஓடக்கூடிய மற்றும் செல்லுக்கு வெளியே காணப்படும் திரவ இணைப்பு திசுவாகும்.

174. பேயர் திட்டுகளில் காணப்படும் நோய்த்தடைக்காப்பு செல்கள் அல்லாதவை யாவை?

A) மேக்ரோஃபேஜ்கள்

B) டென்ரைட்டிக் செல்கள்

C) T செல்கள்

D) லிம்போசைட்டுகள்

விளக்கம்: பேயர் திட்டுகள் மேக்ரோஃபேஜ்கள், டென்ரைட்டிக் செல்கள், T செல்கள் மற்றும் B செல்கள் போன்ற பல்வேறு வகையான நோய்தடைக்காப்பு செல்களைக் கொண்டுள்ளன.

175. கீழ்க்கண்டவை எந்த திசு/ உறுப்பு என கணடறிக?

1] இவை நிணநீர் மண்டலத்தின் ஒரு பகுதியாகும்.

2] இவை தொற்றுகளுக்கு எதிராக போராடுவதில் உதவுகின்றன.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: டான்சில்கள் நிணநீர் மண்டலத்தின் ஒரு பகுதியாகும். இவை தொற்றுகளுக்கு எதிராக போராடுவதில் உதவுகின்றன. மேலும் இவை உள்நுழையும் பாக்டீரியா மற்றும் வைரஸ் போன்ற நுண்கிருமிகளை தடுத்து நிறுத்துகின்றன.

176. _____________ ஒரு இணையான மென் திசுவாகும்.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: டான்சில்கள் (Tonsils) (அண்ண டான்சில்கள்) ஒரு இணையான மென் திசுவாகும்.

177. _____________ ஒரு இரண்டாம் நிலை நிணநீரிய உறுப்பாகும்.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: மண்ணீரல் (Spleen) ஒரு இரண்டாம் நிலை நிணநீரிய உறுப்பாகும்.

178. செல்வழி மற்றும் திரவவழி நோய்தடைகாப்பில் ஈடுபடுபவை_____________

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: T மற்றும் B செல்களை கொண்டுள்ள மண்ணீரல் செல்வழி மற்றும் திரவவழி நோய்தடைகாப்பில் ஈடுபடுகின்றன.

179. கீழ்க்கண்டவை எந்த திசு/ உறுப்பு என கணடறிக?

1] நீள்வட்ட வடிவத்தில் தடித்து காணப்படும் ஒரு திசுவாகும்.

2] இவை மனிதன் மற்றும் முதுகெலும்பு உயிரிகளின் சிறுகுடலில் உள்ள கோழையை சுரக்கும் படலத்தில் புதைந்துள்ளன.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) எலும்பு மஜ்ஜை

விளக்கம்: பேயர் திட்டுகள் (Peyers's patches) நீள்வட்ட வடிவத்தில் தடித்து காணப்படும் ஒரு திசுவாகும். இவை மனிதன் மற்றும் முதுகெலும்பு உயிரிகளின் சிறுகுடலில் உள்ள கோழையை சுரக்கும் படலத்தில் புதைந்துள்ளன.

180. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] டான்சில்கள் தொண்டையின் பின்புறம் அமைந்துள்ளன.

2] பேயர் திட்டுகள் மண்ணீரல் இது வயிற்றுக்குழிக்கு மேலே உதரவிதானத்துக்கு நெருக்கமாக அமைந்துள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: டான்சில்கள் தொண்டையின் பின்புறம் அமைந்துள்ளன. மண்ணீரல் இது வயிற்றுக்குழிக்கு மேலே உதரவிதானத்துக்கு நெருக்கமாக அமைந்துள்ளன.

181. விடலை பருவத்தின் (Adolescence) போது சுருங்க தொடங்கி முதிர்காலத்தில் (Adulthood) மறைந்து விடுவது_____________

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) மண்ணீரல்

D) அடினாய்டுகள்

விளக்கம்: பொதுவாக அடினாய்டுகள் விடலை பருவத்தின் (Adolescence) போது சுருங்க தொடங்கி முதிர்காலத்தில் (Adulthood) மறைந்து விடுகின்றன.

182. கீழ்க்கண்டவை எந்த திசு/ சுரப்பி என கணடறிக?

1] வாயினுடைய கூரை பகுதியில் மென் அண்ணத்துக்கு பின்னால், நுகர்ச்சி உறுப்பு தொண்டையுடன் சேருமிடத்தில் அமைந்துள்ள சுரப்பியாகும்.

2] எதிர்பொருட்களை உற்பத்தி செய்து தொற்றுக்கு எதிரான செயலுக்கு உதவிபுரிகின்றன.

A) பேயர் திட்டுகள்

B) டான்சில்கள்

C) அடினாய்டுகள்

D) மேக்ரோ∴பேஜ்கள்

விளக்கம்: அடினாய்டுகள் என்பது வாயினுடைய கூரை பகுதியில் (Roof of mouth) மென் அண்ணத்துக்கு பின்னால், நுகர்ச்சி உறுப்பு தொண்டையுடன் சேருமிடத்தில் அமைந்துள்ள சுரப்பியாகும். அடினாய்டுகள், எதிர்பொருட்களை உற்பத்தி செய்து தொற்றுக்கு எதிரான செயலுக்கு உதவிபுரிகின்றன.

183. கீழ்க்கண்டவற்றுள் கார்டெக்ஸில் அல்லாதவை எவை?

A) B–லிம்போசைட்டுகள்

B) B– செல்கள்

C) மேக்ரோபேஜ்கள்

D) நுண்பை டென்டிரைட்டிக் செல்கள்

விளக்கம்: வெளி அடுக்கான கார்டெக்ஸில் B–லிம்போசைட்டுகள், மேக்ரோபேஜ்கள், நுண்பை டென்டிரைட்டிக் செல்கள் ஆகியவை உள்ளன.

184. கார்டெக்ஸுக்கு கீழே உள்ள பகுதி_____________

A) மெகாகார்டெக்ஸ்

B) மைக்ரோகார்டெக்ஸ்

C) நானோகார்டெக்ஸ்

D) பாராகார்டெக்ஸ்

விளக்கம்: கார்டெக்ஸுக்கு கீழே உள்ள பகுதி பாராகார்டெக்ஸ் ஆகும்.

185. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] பாராகார்டெக்ஸில் ஏராளமான T–லிம்போசைட்டுகள் மற்றும் விரலமைப்பு கொண்ட டென்டிரைட்டிக் செல்கள் ஆகியவை உள்ளன.

2] மெடுல்லாவின் உள்பகுதியில் குறைந்த அளவிலான B–லிம்போசைட்டுகள் உள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: பாராகார்டெக்ஸில் ஏராளமான T–லிம்போசைட்டுகள் மற்றும் விரலமைப்பு கொண்ட டென்டிரைட்டிக் செல்கள் ஆகியவை உள்ளன. மெடுல்லாவின் உள்பகுதியில் குறைந்த அளவிலான B–லிம்போசைட்டுகள் உள்ளன. ஆனால் அதில் பெரும்பாலானவை எதிர்பொருள் மூலக்கூறுகளை உற்பத்தி செய்யும் பிளாஸ்மா செல்களாகும்.

186. MALT எனப்படுவது_____________

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: MALT எனப்படுவது கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்களாகும்.

187.GALT எனப்படுவது_____________

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: GALT எனப்படுவது குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்களாகும்.

188. BALT எனப்படுவது_____________

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: BALT எனப்படுவது மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்களாகும்.

189. இம்யுனோகுளோபுலின் A எதிர்ப்பு பொருளையும் கொண்டுள்ளது_____________

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள் இம்யுனோகுளோபுலின் A எதிர்ப்பு பொருளையும் கொண்டுள்ளது.

190. கீழ்க்கண்டவற்றுள் MALTல் அல்லாதவை எவை?

A) மேக்ரோஃபேஜ்கள்

B) பிளாஸ்மா செல்கள்

C) B செல்கள்

D) டென்டிரைட்டிக் செல்கள்

விளக்கம்: MALTல் ஏராளமான எண்ணிக்கையில் லிம்போசைட்டுகளின் வகையான T மற்றும் B செல்கள், பிளாஸ்மா செல்கள் மற்றும் மேக்ரோஃபேஜ்கள் ஆகியவை உள்ளன.

191. நிணநீரிய திசுக்களால் ஆக்கப்பட்டுள்ளவை _____________

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள் நிணநீரிய திசுக்களால் (டான்சில்கள், நிணநீர் முடிச்சுகள், நிணநீர் நுண்பைகள்) ஆக்கப்பட்டுள்ளன.

192. கீழ்க்கண்டவை எவை என கணடறிக?

1] இவை கோழைப்படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்களின் ஒரு பகுதியாகும்.

2] இவை நுகர்ச்சி குழிகளில் இருந்து நுரையீரல் வரையுள்ள சுவாசப் பதையின் கோழைப் படலத்தில் காணப்படுகின்றன.

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள் (BALT) கோழைப்படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்களின் ஒரு பகுதியாகும். நிணநீர் நுண்பைகள்) ஆக்கப்பட்டுள்ளன. இவை நுகர்ச்சி குழிகளில் இருந்து நுரையீரல் வரையுள்ள சுவாசப் பதையின் கோழைப் படலத்தில் காணப்படுகின்றன.

193. கீழ்க்கண்டவை எவை என கணடறிக?

1] இவை கோழைப்படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்களின் ஒரு பகுதியாகும்.

2] வை குடலில் நுழையும் நுண்ணுயிர் கிருமிகளில் இருந்து உடலை பாதுகாக்கும் அமைப்பாக செயல்படுகிறது.

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள் (GALT) கோழைப்படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்களின் ஒரு பகுதியாகும். இவை குடலில் நுழையும் நுண்ணுயிர் கிருமிகளில் (எதிர்பொருள் தூண்டிகள்) இருந்து உடலை பாதுகாக்கும் அமைப்பாக செயல்படுகிறது.

194. கீழ்க்கண்டவை எவை என கணடறிக?

1] உணவு மண்டலம், சுவாச மண்டலம் மற்றும் சிறுசீரக இனப்பெருக்க பாதையில் சிறிய அளவில் பரவியுள்ளன.

2] இவை கோழை எபிதீலிய படலத்தின் வழியாக வரும் எதிர்ப்பொருள் தூண்டிகளை அழிக்கின்றன.

A) குடல்சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

B) கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) மூச்சுக்குழல் சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

D) எலும்பு சார்ந்த நிணநீரியத் திசுக்கள்

விளக்கம்: கோழைபடலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள் (MALT) உணவு மண்டலம், சுவாச மண்டலம் மற்றும் சிறுசீரக இனப்பெருக்க பாதையில் சிறிய அளவில் பரவியுள்ளன. இவை கோழை எபிதீலிய படலத்தின் வழியாக வரும் எதிர்ப்பொருள் தூண்டிகளை அழிக்கின்றன.

195. பொருத்துக

a) இரத்தசிவப்பணுக்கள் – 1] 4200,000-6500,000

b) லிம்போசைட்டுகள் – 2] 1500 – 4000

c) மோனோசைட்டுகள் – 3] 200-950

d) நியூட்ரோபில்கள் – 4] 2000-7000

e) பேசோபில்கள் – 5] 50-100

a b c d e

A) 3 1 2 4 5

B) 2 1 3 4 5

C) 2 1 4 3 5

D) 1 2 3 4 5

196. பொருத்துக

a) இயோசினோபில்கள் – 1] 2-5

b) லிம்போசைட்டுகள் – 2] 20-30

c) மோனோசைட்டுகள் – 3] 2-7

d) நியூட்ரோபில்கள் – 4] 50-70

e) பேசோபில்கள் – 5] <1

a b c d e

A) 3 1 2 4 5

B) 2 1 3 4 5

C) 2 1 4 3 5

D) 1 2 3 4 5

197. நீண்ட, மெல்லிய சவ்வின் நீட்சிகாலால் சூழப்பட்டு, நரம்பு செல்லின் டென்ரைட்டுகள் போலத் தோன்றுவது _____________

A) T செல்கள்

B) பிளாஸ்மா செல்கள்

C) B செல்கள்

D) டென்டிரைட்டிக் செல்கள்

விளக்கம்: டென்ரைடிக் செல்கள் நீண்ட, மெல்லிய சவ்வின் நீட்சிகாலால் சூழப்பட்டு, நரம்பு செல்லின் டென்ரைட்டுகள் போலத் தோன்றுவதால் அவை அவ்விதம் அழைக்கப்படுகிறது.

198. டென்டிரைட்டிக் செல்கள் எதிர் பொருள் தூண்டிகளை_____________ செல்களிடம் வழங்குகிறது.

A) T செல்கள்

B) பிளாஸ்மா செல்கள்

C) B செல்கள்

D) T–ஹெல்பர்

விளக்கம்: டென்டிரைட்டிக் செல்கள் எதிர் பொருள் தூண்டிகளை T–ஹெல்பர் செல்களிடம் வழங்குகிறது. நான்கு வகையான டென்ரைட்டு செல்கள் அறியப்பட்டுள்ளன.

199. நான்கு வகையான டென்ரைட்டு செல்கள் அல்லாதவை யாவை?

A) லாங்கர்ஹான்கள்

B) இடையீட்டுச் செல்கள்

C) மைலாய்டு

D) டென்ட்ராய்ட்டு

விளக்கம்: நான்கு வகையான டென்ரைட்டு செல்கள் அறியப்பட்டுள்ளன. அவையாவன லாங்கர்ஹான்கள், இடையீட்டுச் செல்கள், மைலாய்டு மற்றும் லிம்ப்பாய்டு செல்களாகும்.

200. இரத்தத்திலுள்ள வெள்ளையணுக்களில் ஏறத்தாழ_____________ லிம்போசைட்டுகள் ஆகும்.

A) 20–40%

B) 20–50%

C) 25–30%

D) 20–30%

விளக்கம்: இரத்தத்திலுள்ள வெள்ளையணுக்களில் ஏறத்தாழ 20–30% லிம்போசைட்டுகள் ஆகும்.

201. _____________ புறப்பரப்பில் உணர்வேற்பிகள் காணப்படுகின்றன.

A) T செல்கள்

B) பிளாஸ்மா செல்கள்

C) B செல்கள்

D) T–ஹெல்பர்

விளக்கம்: B– செல்களின் புறப்பரப்பில் காணப்படுகின்ற உணர்வேற்பிகள் (Receptors) எதிர்ப்பொருள் தூண்டிகளுடன் இணைந்தவுடன் B– செல்கள் தூண்டப்பட்டு, விரைவாக பெருக்கமடைந்து பிளாஸ்மா செல்களை உற்பத்தி செய்கின்றன.

202. 'B' செல்களின் நினைவாற்றல் செல்கள்_____________ துலங்கல்களில் ஈடுபடுகின்றன.

A) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

B) செயலாக்க தடைக்காப்பு துலங்கல்கள்

C) இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்கள்

D) இயல்பு தடைக்காப்பு துலங்கல்கள்

விளக்கம்: 'B' செல்கள் எதிர்ப்பொருளை உற்பத்தி செய்யாமல் நினைவாற்றல் செல்களாகின்றன. நினைவாற்றல் செல்கள் இரண்டாம் நிலை தடைகாப்பு துலங்கல்களில் (Secondary Immune Responses) ஈடுபடுகின்றன.

203. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] T – லிம்போசைட்டுகள் எதிர்ப்பொருள்களைஉற்பத்தி செய்வதில்லை.

2] லிம்போசைட்டுகள் எதிர்ப்பொருள் தூண்டி முன்னிலைப்படுத்தும் நோயூக்கி செல்களை அடையாளம் கண்டு அழிக்கின்றன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: T – லிம்போசைட்டுகள் எதிர்ப்பொருள்களைஉற்பத்தி செய்வதில்லை. மாறாக, எதிர்ப்பொருள் தூண்டி முன்னிலைப்படுத்தும் நோயூக்கி செல்களை அடையாளம் கண்டு அழிக்கின்றன. T–செல்களில் உதவி T–செல்கள், கொல்லி T–செல்கள் என இரு பெரும் வகைகள் காணப்படுகின்றன.

204. _____________ சைட்டோகைன் எனும் வேதிப்பொருளை வெளியேற்றுகின்றன.

A) உதவி T–செல்கள்

B) கொல்லி T–செல்கள்

C) நியுட்ரோஃபில்கள்

D) மேக்ரோஃபேஜ்கள்

விளக்கம்: உதவி T–செல்கள், சைட்டோகைன் எனும் வேதிப்பொருளை வெளியேற்றுகின்றன.

205. மோனோசைட்டுகள் பெரிய செல்களாக, முதிர்ச்சியடைந்ததும் _____________ என்று அழைக்கப்படுகின்றன.

A) உதவி T–செல்கள்

B) கொல்லி T–செல்கள்

C) நியுட்ரோ∴பில்கள்

D) மேக்ரோ∴பேஜ்கள்

விளக்கம்: மோனோசைட்டுகள் பெரிய செல்களாக, முதிர்ச்சியடைந்ததும் மேக்ரோ∴பேஜ்கள் என்று அழைக்கப்படுகின்றன.

206. _____________ புற ஏற்பியுடன் வினைபுரியும் ஒரு பொருளே எதிர்ப்பொருள் தூண்டி எனப்படும்.

A) T செல்கள்

B) பிளாஸ்மா செல்கள்

C) B செல்கள்

D) T–ஹெல்பர்

விளக்கம்: T–செல் புற ஏற்பியுடன் வினைபுரியும் ஒரு பொருளே எதிர்ப்பொருள் தூண்டி எனப்படும்.

207. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] முதன்மை திசுபொருத்த எதிர்ப்பொருள் தூண்டிகள் என்பவை செல்களின் புறபரப்பில் காணப்படும் எதிர்பொருள் தூண்டிகளாகும்.

2] இவை தடைக்காப்பு துலங்கல்களை தூண்டுவதன் விளைவாக ஒரே இன உயிரிகளுக்கிடையே மாற்றப்படும் உறுப்புகள் நிராகரிக்கப்படுகிறது.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: முதன்மை திசுபொருத்த எதிர்ப்பொருள் தூண்டிகள் என்பவை செல்களின் புறபரப்பில் காணப்படும் எதிர்பொருள் தூண்டிகளாகும். இவை தடைக்காப்பு துலங்கல்களை தூண்டுவதன் விளைவாக ஒரே இன உயிரிகளுக்கிடையே மாற்றப்படும் உறுப்புகள் நிராகரிக்கப்படுகிறது.

208. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] எதிர்பொருள் தூண்டிகள் என்பவை தடைக்காப்பு துலங்கலை உண்டாக்கும். மூலக்கூறுகளை விளக்குகிறது.

2] எதிர்பொருள் தூண்டிகள் என்பவை முன்னர் உருவாகிய எதிர்ப்பொருளுடன் வினைபுரியும் மூலக்கூறுகளைக் குறிக்கிறது.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: எதிர்பொருள் தூண்டிகள் எனும் சொல்லுக்கு இருவிதமாக பொருள் கொள்ளப்படுகிறது. ஒன்று இவை தடைக்காப்பு துலங்கலை உண்டாக்கும். மூலக்கூறுகளை விளக்குகிறது. மற்றொன்று முன்னர் உருவாகிய எதிர்ப்பொருளுடன் வினைபுரியும் மூலக்கூறுகளைக் குறிக்கிறது.

209. கூற்று(A): தடைகாப்பு துலங்கலைத் தூண்டாத, ஆனால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட எதிர்ப்பொருளுடன் வினைபுரியக்கூடியது.

காரணம்(R): இவை ஹாப்டென்கள் எனப்படும்

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: ஹாப்டென்கள் (Haptens) என்பவை தடைகாப்பு துலங்கலைத் தூண்டாத, ஆனால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட எதிர்ப்பொருளுடன் வினைபுரியக்கூடியதாகும்.

210. _____________ என்பவை எதிர்பொருள் தூண்டியின் செயல்மிகு பகுதியாகும்.

A) ஹாப்டென்கள்

B) எபிடோப்

C) பாராடோப்

D) துணையூக்கிகள்

விளக்கம்: எபிடோப் (Epitope) என்பவை எதிர்பொருள் தூண்டியின் செயல்மிகு பகுதியாகும்.

211. _____________ என்பது எதிர்ப்பொருள் தூண்டி பிணையும் பகுதியாகும்.

A) ஹாப்டென்கள்

B) எபிடோப்

C) பாராடோப்

D) துணையூக்கிகள்

விளக்கம்: பாராடோப் (Paratope) என்பது எதிர்ப்பொருள் தூண்டி பிணையும் பகுதியாகும்.

212. எதிர்ப்பொருள் தூண்டிக்கெதிரான தடைக்காப்பு துலங்கல்களை அதிகரிக்க செய்கின்ற வேதிப்பொருள்_____________

A) ஹாப்டென்கள்

B) எபிடோப்

C) பாராடோப்

D) துணையூக்கிகள்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டிக்கெதிரான தடைக்காப்பு துலங்கல்களை அதிகரிக்க செய்கின்ற வேதிப்பொருள் துணையூக்கிகள் (Adjuvants) எனப்படும்.

213. _____________ திர்ப்பொருள் தூண்டி நிர்ணயக்கூறுகளாகும்.

A) ஹாப்டென்கள்

B) எபிடோப்

C) பாராடோப்

D) துணையூக்கிகள்

விளக்கம்: எபிடோப் எதிர்ப்பொருள் தூண்டி நிர்ணயக்கூறுகளாகும்.

214. தடைக்காப்பு துலங்கல்களை தூண்டக்கூடிய ஒரு மூலக்கூறு_____________

A) தடைக்காப்பு மூலக்கூறு

B) தடைக்காப்பு தூண்டி

C) தடைக்காப்பு துணையூக்கிகள்

D) தடைக்காப்புதுலங்கல்

விளக்கம்: தடைக்காப்பு தூண்டி (Immunogen) என்பவை தடைக்காப்பு துலங்கல்களை தூண்டக்கூடிய ஒரு மூலக்கூறு ஆகும்.

215. கூற்று(A): ஒரு எதிர்ப்பொருள் தூண்டி ஒரு குறிப்பிட்ட தடைக்காப்பு துலங்கலால் உருவான எதிர்ப்பொருளுடன் வினைபுரிய அனுமதிக்கிறது.

காரணம்(R): இது எதிர்ப்பொருள் உருவாக்கும் திறன் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: எதிர்ப்பொருள் உருவாக்கும் திறன் (Antigenicity) என்பது ஒரு எதிர்ப்பொருள் தூண்டி ஒரு குறிப்பிட்ட தடைக்காப்பு துலங்கலால் உருவான எதிர்ப்பொருளுடன் வினைபுரிய அனுமதிக்கும் பண்பாகும்.

216. கீழ்க்கண்டவற்றுள் புறந்தோன்றி எதிர்பொருள் தூண்டிகள் அல்லாதவை எவை?

A) நுண்ணுயிரிகள்

B) மகரந்த துகள்கள்

C) மருந்துபொருட்கள்

D) மனித இரத்தவகை

விளக்கம்: நுண்ணுயிரிகள், மகரந்த துகள்கள், மருந்துபொருட்கள் மற்றும் மாசுபடுத்திகள் வெளிச்சூழலில் இருந்து விருந்தோம்பியின் உடலில் நுழைவதால் அவைகள் புறந்தோன்றி எதிர்பொருள் தூண்டிகள் என அழைக்கப்படுகின்றன.

217. கூற்று(A): தனி உயிரியின் உடலுக்குள்ளே உருவாகும் எதிர்ப்பொருள் தூண்டிகள் உருவாகின்றன.

காரணம்(R): இது அகந்தோன்றி எதிர்பொருள் தூண்டிகள் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: தனி உயிரியின் உடலுக்குள்ளே உருவாகும் எதிர்ப்பொருள் தூண்டிகள் அகந்தோன்றி எதிர்பொருள் தூண்டிகளாகும்.

218. கூற்று(A): எதிர்ப்பொருள் தூண்டிகளுக்கு எதிராக புரத மூலக்கூறுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

காரணம்(R): இது இம்யுனோகுளோபுலின் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டிகளுக்கு எதிராக உற்பத்தி செய்யப்படும் புரத மூலக்கூறுகளே எதிர்பொருட்கள் அல்லது இம்யுனோகுளோபுலின் (Ig) எனப்படும்.

219. எதிர்பொருள் தூண்டிகளுக்க்கு எதிராக B–செல்கள் உற்பத்தி செய்யும் செல்கள்_____________

A) B செல்கள்

B) T செல்கள்

C) பிளாஸ்மா செல்கள்

D) B–லிம்போசைட்டுகள்

விளக்கம்: எதிர்பொருள் தூண்டிகளுக்கு எதிராக B–செல்கள் உற்பத்தி செய்யும் செல்கள் பிளாஸ்மா செல்கள் எனப்படும்.

220. கீழ்க்கண்டவற்றுள் எதிர்ப்பொருட்களின் வகைகள் அல்லாதவை எவை?

A) IgG

B) IgB

C) IgM

D) IgD

விளக்கம்: உடற்செயலிய மற்றும் உயிர்வேதிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்ப்பொருட்கள் IgG (காமா), IgM (மியு), IgA (ஆல்ஃபா), IgD (டெல்டா) மற்றும் IgE (எப்சிலான்) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

221. இம்யுனோகுளோபினின் அடிப்படை அமைப்பு யாரால் கண்டுபுடிக்கப்பட்டது?

A) டெர்மென்

B) ஈடெல்மென்

C) போர்டெல்

D) போர்டெர் மற்றும் ஈடெல்மென்

விளக்கம்: 1950 களில் போர்டெர் (Porter) மற்றும் ஈடெல்மென் (Edelmen) ஆகியோர், செய்த சோதனைகளின் முடிவில், இம்யுனோகுளோபினின் அடிப்படை அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

222. இம்யுனோகுளோபினின் எதிர்ப்பொருள் Y–வடிவ அமைப்புடன்_____________ பாலிபெப்டைடு சங்கிலிகளை கொண்டதாகும்.

A) மூன்று

B) இரண்டு

C) நான்கு

D) ஐந்து

விளக்கம்: இம்யுனோகுளோபினின் எதிர்ப்பொருள் Y–வடிவ அமைப்புடன் நான்கு பாலிபெப்டைடு சங்கிலிகளை கொண்டதாகும்.

223. இம்யுனோகுளோபின் பணிகள் யாவை?

A) வீழ்படிவாக்குதல்

B) எதிர்பொருள் தூண்டிகளை திரிபடைய செய்தல்

C) எதிர்பொருள் தூண்டிகளின் மீது மேல் பூச்சு செய்தல்

D) இவை அனைத்தும்

விளக்கம்: எதிர்பொருள் தூண்டிகளை திரிபடைய செய்தல் (Agglutination), வீழ்படிவாக்குதல் (Precipitation), அவற்றின் நச்சை சமநிலைபடுத்தல் (Neutralization) மற்றும் எதிர்பொருள் தூண்டிகளின் மீது மேல் பூச்சு செய்தல் (Opsonisation) போன்ற பணிகளை இம்யுனோகுளோபின் செய்கின்றன.

224. தூண்டிபிணைப்பு இடங்கள் காணப்படுகின்றன. எதிர்ப்பொருள் ஒற்றைப் படியின் தண்டாக இருக்கக்கூடிய_____________ எதிர்ப்பொருளின் வகையை நிர்ணயிக்கிறது.

A) B பகுதி

B) C பகுதி

C) T பகுதி

D) S பகுதி

விளக்கம்: தூண்டிபிணைப்பு இடங்கள் காணப்படுகின்றன. எதிர்ப்பொருள் ஒற்றைப் படியின் தண்டாக இருக்கக்கூடிய 'C' பகுதி, எதிர்ப்பொருளின் வகையை நிர்ணயிக்கிறது.

225. எதிர்பொருள் தூண்டி மற்றும் எதிர்ப்பொருள்களுக்கிடையான வினை நடைபெறும் நிலை யாவை?

A) எதிர்பொருள் தூண்டி– எதிர்ப்பொருள் கூட்டமைப்பு உருவாகிறது.

B) திரிபடைய செய்தல்

C) வீழ்படிவாதல்

D) இவை அனைத்தும்

விளக்கம்: எதிர்பொருள் தூண்டி மற்றும் எதிர்ப்பொருள்களுக்கிடையான வினை மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது. முதல்நிலையில் எதிர்பொருள் தூண்டி– எதிர்ப்பொருள் கூட்டமைப்பு உருவாகிறது. இரண்டாவது நிலையில் திரிபடைய செய்தல் மற்றும் வீழ்படிவாதல் போன்ற செயல்கள் நடைபெறுகின்றன.

226. கூற்று(A): ஒரு நோயூக்கியை ஒரு விழுங்கி செல் சிதைத்தோ அல்லது விழுங்கியோ அழிக்க அடையாமிடுதலைக் குறிக்கிறது.

காரணம்(R): இது மேல்ப்பூச்சாக்கம் அல்லது மேம்படுத்தப்பட்ட ஒட்டுதல் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: ஒரு நோயூக்கியை ஒரு விழுங்கி செல் சிதைத்தோ அல்லது விழுங்கியோ அழிக்க அடையாமிடுதலைக் குறிக்கிறது. இது மேல்ப்பூச்சாக்கம் அல்லது மேம்படுத்தப்பட்ட ஒட்டுதல் எனப்படும்.

227. மேல்பூச்சாக்க முறையில் _____________ எனப்படும் எதிர்ப்பொருள், நோயூக்கியின் செல்சவ்வில்உள்ள உணர் வேற்பியுடன் (Receptor) பிணைகின்றன.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளுட்டினின்

D) எதிர்ப்பொருள் ஈர்ப்பு

விளக்கம்: மேல்பூச்சாக்க முறையில் மேல்பூச்சாக்கி (Opsonin) எனப்படும் எதிர்ப்பொருள், நோயூக்கியின்செல்சவ்வில்உள்ள உணர் வேற்பியுடன் (Receptor) பிணைகின்றன.

228. நடுநிலையாக்கத்தில் எதிர்பொருட்கள்_____________ என அழைக்கப்படுகின்றன.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளுட்டினின்

D) நச்சு எதிர்பொருட்கள்

விளக்கம்: நடுநிலையாக்கத்தில் எதிர்பொருட்கள் நச்சு எதிர்பொருட்கள் என அழைக்கப்படுகின்றன.

229. நச்சு எதிர்ப்பொருட்கள் பாக்டீரிய புறநச்சு அல்லது_____________ எதிராக விருந்தோம்பியின் செல்களால் உருவாக்கப்படுகின்றன.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளுட்டினின்

D) நச்சு எதிர்பொருட்கள்

விளக்கம்: நச்சு எதிர்ப்பொருட்கள் பாக்டீரிய புறநச்சு அல்லது முறித்த நச்சு (டாக்சாய்டு) விற்கு எதிராக விருந்தோம்பியின் செல்களால் உருவாக்கப்படுகின்றன.

230. கூற்று(A): ஒரு துகள் தன்மை கொண்ட எதிர்ப்பொருள் தூண்டி எதிர்ப்பொருளுடன் வினைபுரியும் போது அத்துகள் எதிர்ப்பொருள் தூண்டிகள் திரிபடைகின்றன அல்லது திரட்சி அடைகின்றன.

காரணம்(R): இது திரட்சி வினை அல்லது திரிபடைதல் வினை என்று அழைக்கப்படுகின்றது.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: திரட்சி அடைதல் (Agglutination): ஒரு துகள் தன்மை கொண்ட எதிர்ப்பொருள் தூண்டி எதிர்ப்பொருளுடன் வினைபுரியும் போது அத்துகள் எதிர்ப்பொருள் தூண்டிகள் திரிபடைகின்றன அல்லது திரட்சி அடைகின்றன. இது திரட்சி வினை அல்லது திரிபடைதல் வினை என்று அழைக்கப்படுகின்றது.

231. திரிபடைதலை உருவாக்கும் எதிர்ப்பொருள்______________ எனப்படுகிறது.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளூட்டினின்

D) நச்சு எதிர்பொருட்கள்

விளக்கம்: திரிபடைதலை உருவாக்கும் எதிர்ப்பொருள் திரளி (அக்ளூட்டினின்) எனப்படுகிறது.

232. கூற்று(A): கரையக்கூடிய எதிர்ப்பொருள் தூண்டி மற்றும் எதிர்ப்பொருள் ஆகியவற்றுக்கிடையேயான வினைகள் மூலம் காணக்கூடிய வீழ்படிவு உருவாகிறது.

காரணம்(R): இது வீழ்படிவாக்க வினை எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: வீழ்படிவாக்க வினை (Precipitin reaction) : கரையக்கூடிய எதிர்ப்பொருள் தூண்டி மற்றும் எதிர்ப்பொருள் ஆகியவற்றுக்கிடையேயான வினைகள் மூலம் காணக்கூடிய வீழ்படிவு உருவாகிறது. இது வீழ்படிவாக்க வினை (Precipitin reaction) எனப்படும்.

233. எதிர்பொருள் தூண்டியுடன் வினைபுரிந்து வீழ்படிவுகளை உருவாக்கும் எதிர்ப்பொருட்கள்_____________ என அழைக்கப்படுகின்றன.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளூட்டினின்

D) வீழ்படிவாக்கிகள்

விளக்கம்: எதிர்பொருள் தூண்டியுடன் வினைபுரிந்து வீழ்படிவுகளை உருவாக்கும் எதிர்ப்பொருட்கள் வீழ்படிவாக்கிகள் (Precipitins) என அழைக்கப்படுகின்றன.

234. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] எதிர்ப்பொருள்தூண்டி – எதிர்ப்பொருள் வினைகள் இரத்த பரிமாற்றத்தின் போது இரத்த வகைகளை நிர்ணயித்தலில் பயன்படுகிறது.

2] தொற்றுகிருமிகளை கண்டறிவதற்கான சீரம் சார்ந்த உறுதிபடுத்தும் சோதனையிலும் எதிர்ப்பொருள்தூண்டி – எதிர்ப்பொருள் வினைகள் பயன்படுகிறது.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: எதிர்ப்பொருள்தூண்டி – எதிர்ப்பொருள் வினைகளின் பயன்பாடுகளாவன: இரத்த பரிமாற்றத்தின் போது இரத்த வகைகளை நிர்ணயித்தலில் பயன்படுகிறது. தொற்றுகிருமிகளை கண்டறிவதற்கான சீரம் சார்ந்த உறுதிபடுத்தும் சோதனையிலும் பயன்படுகிறது.

235. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] எதிர்ப்பொருள்தூண்டி – எதிர்ப்பொருள் வினைகள் அயல்பொருட்களை கண்டறிவதற்கான தடைக்காப்பு மதிப்பீட்டிலான சோதனையில் பயன்படுகிறது.

2] சீரத்தில் புரதம் உள்ளதா என்பதைக் கண்டறிய உதவும் சோதனை சோதனையிலும் எதிர்ப்பொருள்தூண்டி – எதிர்ப்பொருள் வினைகள் பயன்படுகிறது.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: அயல்பொருட்களை கண்டறிவதற்கான தடைக்காப்பு மதிப்பீட்டிலான சோதனை, சீரத்தில் புரதம் உள்ளதா என்பதைக் கண்டறிய உதவும் சோதனை மற்றும் சில தடைக்காப்பு குறைவு நோய்களின் பண்புகளை கண்டறியும் சோதனை போன்றவற்றில் தூண்டி–எதிர்ப்பொருள் வினை பெரிதும் பயன்படுகிறது.

236. எதிர்பொருள் தூண்டியையும் எதிர்ப்பொருளையும் பிணைக்ககூடிய பிணைப்பு_____________ பண்பு கொண்டதாகும்.

A) சமமற்ற பிணை பண்பு

B) எதிர்ப்பொருள் ஈர்ப்பு

C) இணை பிணை பண்பு

D) சக பிணைப்பில்லாத பண்பு

விளக்கம்: எதிர்பொருள் தூண்டியையும் எதிர்ப்பொருளையும் பிணைக்ககூடிய பிணைப்பு சக பிணைப்பில்லாத பண்பு கொண்டதாகும்.

237. கீழ்க்கண்டவற்றுள் சகபிணைப்பற்ற பிணைப்புகள் அல்லாதவை யாவை?

A) மின்நிலை விசை பிணைப்புகள்

B) ஹைட்ரஜன் பிணைப்பு

C) வான்டர்வால் ஆற்றல்

D) கார்பன் பிணைப்பு

விளக்கம்: மின்நிலை விசை பிணைப்புகள், ஹைட்ரஜன் பிணைப்பு, வான்டர்வால் ஆற்றல் மற்றும் நீர்விலக்கு பிணைப்பு ஆகியன சகபிணைப்பற்ற பிணைப்புகளாகும்.

238. ஒரு எதிர்ப்பொருள் தூண்டியின் நிர்ணயக்கூறுகளுக்கும் ஒரு எதிர்ப்பொருளின் பிணைப்பிடத்திற்கும் இடையேயான வினைகளின் வலிமையே_____________ எனப்படும்.

A) டாக்சாய்டு

B) மேல்பூச்சாக்கி

C) அக்ளூட்டினின்

D) எதிர்ப்பொருள் ஈர்ப்பு

விளக்கம்: ஒரு எதிர்ப்பொருள் தூண்டியின் நிர்ணயக்கூறுகளுக்கும் ஒரு எதிர்ப்பொருளின் பிணைப்பிடத்திற்கும் இடையேயான வினைகளின் வலிமையே எதிர்ப்பொருள் ஈர்ப்பு எனப்படும்.

239. எதிர்ப்பொருள் தூண்டி– எதிர்ப்பொருள் வினையின் இணைப்பு விசை 3 காரணிகள் யாவை?

A) எதிர்பொருள் தூண்டி மற்றும் எதிர்பொ ருள் இடையேயான நெருக்கம்

B) சகபிணைப்பு அல்லாத மூலக்கூறுகளிடையேயான விசை

C) எதிர்ப்பொருள் ஈர்ப்பு

D) இவை அனைத்தும்

விளக்கம்: எதிர்ப்பொருள் தூண்டி– எதிர்ப்பொருள் வினையின் இணைப்பு விசை 3 காரணிகளால் அமைகின்றன. இவை எதிர்பொருள் தூண்டி மற்றும் எதிர்பொ ருள் இடையேயான நெருக்கம், சகபிணைப்பு அல்லாத (Non covalent) அல்லது மூலக்கூறுகளிடையேயான விசை மற்றும் எதிர்ப்பொருள் ஈர்ப்பு ஆகியவையாகும்.

240. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இம்யுனோகுளோபின்ஒன்று C–முனையாகும் (அமினோ முனை)

2] மற்றொன்று N–முனை அல்லது கார்பாக்ஸைல்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இம்யுனோகுளோபின் ஒவ்வொரு சங்கிலியும் (L மற்றும் H) இரண்டு முனைகளைக் கொண்டுள்ளது. ஒன்று C–முனையாகும் (கார்பாக்ஸைல்) மற்றொன்று N–முனை அல்லது அமினோ முனையாகும்.

241. ஒரு குறிப்பிட்ட நோய்க்கெதிராக செயல்திறனுள்ள பெறப்பட்ட நோய்த்தடைக்காப்பினைத் தரக்கூடிய உயிரியத் தயாரிப்பே_____________ எனப்படும்.

A) டாக்சாய்டு

B) ஆன்டிஜன்

C) ஆன்டிபாடி

D) தடுப்பு மருந்து

விளக்கம்: ஒரு குறிப்பிட்ட நோய்க்கெதிராக செயல்திறனுள்ள பெறப்பட்ட நோய்த்தடைக்காப்பினைத் தரக்கூடிய உயிரியத் தயாரிப்பே தடுப்பு மருந்து எனப்படும்.

242. _____________ வயதான, குறைவான வீரியம் கொண்ட வைரஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன.

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்தில் வயதான, குறைவான வீரியம் கொண்ட வைரஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன.

243. கீழ்க்கண்டவற்றுள் வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்துகள் அல்லாதவை யாவை?

A) தட்டம்மை

B) புட்டாளம்மை

C) ரூபெல்லா

D) போலியோ

விளக்கம்: வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்துக்கு எ.கா. தட்டம்மை, புட்டாளம்மை மற்றும் ரூபெல்லா (MMR) மற்றும் சின்னம்மை (வேரிசெல்லா) தடுப்பு மருந்து.

244. வெப்பம் மற்றும் பிறமுறைகளால் கொல்லப்பட்டவை அல்லது செயலிழக்கம் செய்யப்பட்டவை_____________

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: கொல்லப்பட்ட (செயலிழக்க செய்த) தடுப்பு மருந்துகள் என்பவை வெப்பம் மற்றும் பிறமுறைகளால் கொல்லப்பட்டவை அல்லது செயலிழக்கம் செய்யப்பட்டவையாகும்.

245. சாலக் போலியோ தடுப்பு மருந்து _____________

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: கொல்லப்பட்ட (செயலிழக்க செய்த) தடுப்பு மருந்துக்கு எ.கா. சாலக் போலியோ தடுப்பு மருந்து.

246. _____________ பாக்டீரியா அல்லது வைரஸ்களால் சுரக்கப்பட்ட நச்சு அல்லது வேதிப்பொருள்கள் உள்ளன.

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) முறிந்த நச்சு தடுப்பு மருந்து

விளக்கம்: முறிந்த நச்சு தடுப்பு மருந்தில், பாக்டீரியா அல்லது வைரஸ்களால் சுரக்கப்பட்ட நச்சு அல்லது வேதிப்பொருள்கள் உள்ளன. இவை நோய் தொற்றின் தீய விளைவுகளுக்கு எதிரான நோய்தடைகாப்பை நமக்கு அளிக்கின்றன.

247. முத்தடுப்பு மருந்து_____________

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) முறிந்த நச்சு தடுப்பு மருந்து

விளக்கம்: முறிந்த நச்சு தடுப்பு மருந்துக்கு எ.கா. முத்தடுப்பு மருந்து (DPT) (தொண்டை அடைப்பான், கக்குவான் – இருமல் மற்றும் இரணஜன்னி).

248. _____________ நோயூக்கிகளின் புறப்பரப்பு எதிர்ப்பொருள் தூண்டிகளைக் கொண்டவையாகும்.

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள் என்பவை நோயூக்கிகளின் புறப்பரப்பு எதிர்ப்பொருள் தூண்டிகளைக் கொண்டவையாகும்.

249. கல்லீரல் அழற்சி B தடுப்பு மருந்து_____________

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளைக் கொண்ட தடுப்பு மருந்து

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துக்கு எ.கா. கல்லீரல் அழற்சி B தடுப்பு மருந்து.

250. கூற்று(A): தடுப்பு மருந்துகளை நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

காரணம்(R): இது தடுப்பு மருந்து சிகிச்சை எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: தடுப்பு மருந்துகளை நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுத்தும் முறை தடுப்பு மருந்து சிகிச்சை எனப்படும்.

251. _____________ பெரியம்மை நோய்க்கான தடுப்பு மருந்தை முதன் முதலில் தயாரித்தார்.

A) டாக்டர்ஜோனந் சால்க்

B) டாக்டர் ஆல்பர்ட் சாபின்

C) லூயிஸ் பாஸ்டர்

D) டாக்டர் எட்வர்ட் ஜென்னர்

விளக்கம்: டாக்டர் எட்வர்ட் ஜென்னர் 1796 ல் பெரியம்மை நோய்க்கான தடுப்பு மருந்தை முதன் முதலில் தயாரித்தார்.

252. போலியோ தடுப்பு மருந்தை_____________ தயாரித்தார்.

A) டாக்டர்ஜோனந் சால்க்

B) டாக்டர் ஆல்பர்ட் சாபின்

C) லூயிஸ் பாஸ்டர்

D) டாக்டர் எட்வர்ட் ஜென்னர்

விளக்கம்: போலியோ தடுப்பு மருந்தை (கொல்லப்பட்ட நுண்ணுயிரிகளை கொண்ட தடுப்பு மருந்து) டாக்டர் ஜோனந் சால்க் என்பவர் தயாரித்தார்.

253. வாய் வழி எடுத்துக்கொள்ளக்கூடிய வீரியமிழந்த உயிருள்ள போலியோ தடுப்பு மருந்தை_____________ தயாரித்தார்.

A) டாக்டர்ஜோனந் சால்க்

B) டாக்டர் ஆல்பர்ட் சாபின்

C) லூயிஸ் பாஸ்டர்

D) டாக்டர் எட்வர்ட் ஜென்னர்

விளக்கம்: வாய் வழி எடுத்துக்கொள்ளக்கூடிய வீரியமிழந்த உயிருள்ள போலியோ தடுப்பு மருந்தை டாக்டர் ஆல்பர்ட் சாபின் என்பவர் தயாரித்தார்.

254. ஆந்தராக்ஸ் மற்றும் காலரா நோய்க்கான தடுப்பு மருந்துகளை_____________கண்டுபுடித்தார்.

A) டாக்டர்ஜோனந் சால்க்

B) டாக்டர் ஆல்பர்ட் சாபின்

C) லூயிஸ் பாஸ்டர்

D) டாக்டர் எட்வர்ட் ஜென்னர்

விளக்கம்: லூயிஸ் பாஸ்டர் ஆந்தராக்ஸ் மற்றும் காலரா நோய்க்கான தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்தார்.

255. லூயிஸ் பாஸ்டர் வெறிநாய்கடிக்கு தடுப்பு மருந்து கண்டுபுடித்த ஆண்/டு_____________

A) 1884*

B) 1885

C) 1886

D) 1887

விளக்கம்: லூயிஸ் பாஸ்டர் வெறிநாய்கடிக்கு தடுப்பு மருந்து கண்டுபுடித்த ஆண்டு: 1885.

256. BCG தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்ட ஆண்டு_____________

A) 1907

B) 1908

C) 1909

D) 1910

விளக்கம்: BCG தடுப்பு மருந்து கால்மெட் மற்றும் குயரின் ஆகியோரால் காசநோய்க்கு எதிராக 1908 ஆம் ஆண்டு பிரான்சில் தயாரிக்கப்பட்டது.

257. _____________ செயற்கையாக தயாரிக்கப்பட்ட தூய்மையான ஆற்றல் மிக்க தடுப்பு மருந்துகளாகும்.

A) முதல் தலைமுறை தடுப்பு மருந்து

B) வீரியமிழந்த உயிருள்ள தடுப்பு மருந்து

C) மூன்றாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

D) இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்துகள்

விளக்கம்: மூன்றாம் தலைமுறை தடுப்பு மருந்துகள் செயற்கையாக தயாரிக்கப்பட்ட தூய்மையான ஆற்றல் மிக்க தடுப்பு மருந்துகளாகும்.

258. தடுப்பு மருந்தின் சமீபத்திய புரட்சி_____________

A) ஆர். என். ஏ தடுப்பு மருந்து

B) இணைவு தடுப்பு மருந்து

D) மறுசேர்க்கை இணைவு தடுப்பு மருந்து

D) டி.என்.ஏ தடுப்பு மருந்து

விளக்கம்: தடுப்பு மருந்தின் சமீபத்திய புரட்சி டி.என்.ஏ தடுப்பு மருந்து அல்லது மறுசேர்க்கை தடுப்பு மருந்து ஆகும்.

259. _____________ ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிரான நோய்த்தடைக்காப்பை நமது உடல் உருவாக்குவதாகும்.

A) தடுப்பு மருந்தேற்றம்

B) மிகைஉணர்மை

C) அனாபைலாக்சிஸ்

D) நோய்த்தடுப்பாக்கம்

விளக்கம்: நோய்த்தடுப்பாக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிரான நோய்த்தடைக்காப்பை நமது உடல் உருவாக்குவதாகும்.

260. _____________ குறிப்பிட்ட நோய்க்கு எதிரான நோய்தடைக்காப்பை ஏற்படுத்துவதற்காக நமது உடலில் தடுப்பு மருந்தை செலுத்துவதாகும்.

A) தடுப்பு மருந்தேற்றம்

B) மிகைஉணர்மை

C) அனாபைலாக்சிஸ்

D) நோய்த்தடுப்பாக்கம்

விளக்கம்: தடுப்பு மருந்தேற்றம் என்பது குறிப்பிட்ட நோய்க்கு எதிரான நோய்தடைக்காப்பை ஏற்படுத்துவதற்காக நமது உடலில் தடுப்பு மருந்தை செலுத்துவதாகும்.

261. சுற்றுபுறத்தில் காணப்படும் சில நோய் எதிர்ப்பு தூண்டிகளை நமது உடல் எதிர்கொள்ளும்போது நமது தடைக்காப்பு மண்டலம் மிகை துலங்கலை ஏற்படுத்துவது_____________

A) ஒவ்வாமை

B) மிகைஉணர்மை

C) அனாபைலாக்சிஸ்

D) நோய்த்தடுப்பாக்கம்

விளக்கம்: சுற்றுபுறத்தில் காணப்படும் சில நோய் எதிர்ப்பு தூண்டிகளை நமது உடல் எதிர்கொள்ளும்போது நமது தடைக்காப்பு மண்டலம் மிகை துலங்கலை ஏற்படுத்துவது ஒவ்வாமை எனப்படும்.

262. வரம்புமீரிய தடைகாப்பு துலங்கலுக்குக் காரணமான பொருட்கள்_____________

A) ஒவ்வாமை வினை

B) ஒவ்வாமை

C) ஒவ்வாமை தூண்டிகள்

D) அனாபைலாக்சிஸ்

விளக்கம்: வரம்புமீரிய தடைகாப்பு துலங்கலுக்குக் காரணமான பொருட்கள் ஒவ்வாமை தூண்டிகள் (Allergens) என அழைக்கப்படுகின்றன.

263. ஒவ்வாமை தூண்டிகளுக்கு எடுத்துக்காட்டுகள் யாவை?

A) மகரந்த துகள்கள்

B) தூசுகளில் உள்ள சிற்றுண்ணிகள்

C) பூச்சிகளில் காணப்படும் சிலவகை நச்சு புரதங்கள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: மகரந்த துகள்கள், தூசுகளில் உள்ள சிற்றுண்ணிகள் (Mites) மற்றும் பூச்சிகளில் காணப்படும் சிலவகை நச்சு புரதங்கள் ஆகியவை பொதுவான ஒவ்வாமை தூண்டிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

264. வைக்கோல் காய்ச்சல்____________

A) ஒவ்வாமை வினை

B) ஒவ்வாமை

C) ஒவ்வாமை தூண்டிகள்

D) அனாபைலாக்சிஸ்

விளக்கம்: வைக்கோல் காய்ச்சல் (Hay fever) மற்றும் ஆஸ்துமா ஆகியவை ஒவ்வாமைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

265. ஒவ்வாமை வினையின் அறிகுறிள் யாவை?

A) தும்மல்

B) கண்களில் நீர்க்கோத்தல்

C) , மூக்கு ஒழுகுதல்

D) இவை அனைத்தும்

விளக்கம்: தும்மல், கண்களில் நீர்க்கோத்தல், மூக்கு ஒழுகுதல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் போன்றவை ஒவ்வாமை வினையின் அறிகுறிகளாகும்.

266. ____________ மாஸ்ட்செல்களால் செயல்படுத்தப்படும் மிகை தடைக்காப் பு துலங்கல்களின் ஒரு வகையே ஒவ்வாமை எனப்படும்.

A) IgA

B) IgE

C) IgM

D) IgB

விளக்கம்: IgE மற்றும் மாஸ்ட்செல்களால் செயல்படுத்தப்படும் மிகை தடைக்காப் பு துலங்கல்களின் ஒரு வகையே ஒவ்வாமை எனப்படும்.

267. மாஸ்ட் செல்களால் வெளியேற்றப்படும்____________ மற்றும் செரட்டோனின் போன்ற வேதிப்பொருட்களாலும் ஒவ்வாமை ஏற்படலாம்.

A) ஹிஸ்டோனின்

B) செரஹிஸ்

C) மின்டோனின்

D) ஹிஸ்டமின்

விளக்கம்: மாஸ்ட் செல்களால் வெளியேற்றப்படும ஹிஸ்டமின் மற்றும் செரட்டோனின் போன்ற வேதிப்பொருட்களாலும் ஒவ்வாமை ஏற்படலாம்.

268. ____________ என்பது உடனடியாக ஏற்படும் மிகை உணர்வாக்க வினையாகும்.

A) தடுப்பு மருந்தேற்றம்

B) மிகைஉணர்மை

C) அனாபைலாக்சிஸ்

D) நோய்த்தடுப்பாக்கம்

விளக்கம்: அனாபைலாக்சிஸ் என்பது உடனடியாக ஏற்படும் மிகை உணர்வாக்க வினையாகும்.

269. திடீர் என முறையாக, தீவிரமாக மற்றும் உடனடியாக தோன்றும் அதிதீவிர ஒவ்வாமை வினை____________

A) தடுப்பு மருந்தேற்றம்

B) மிகைஉணர்மை

C) அனாபைலாக்சிஸ்

D) நோய்த்தடுப்பாக்கம்

விளக்கம்: அனாபைலாக்சிஸ் திடீர் என முறையாக, தீவிரமாக மற்றும் உடனடியாக தோன்றும் அதிதீவிர ஒவ்வாமை வினையாகும்.

270. ____________ மரபியல் குறைபாட்டு காரணங்களால் ஏற்படுகிறது.

A) இரண்டாம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

B) மூன்றாம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

C) நான்காம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

D) முதல்நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

விளக்கம்: முதல்நிலை தடைக்காப்பு குறைபாடுகள் மரபியல் குறைபாட்டு காரணங்களால் ஏற்படுகிறது.

271. நோய்த்தடைக்காப்பை ஒடுக்கும் மருந்துகள் ஆகியவற்றால் ஏற்படுவது____________

A) இரண்டாம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

B) மூன்றாம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

C) நான்காம் நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

D) முதல்நிலை தடைக்காப்பு குறைபாடுகள்

விளக்கம்: இரண்டாம் நிலை தடைக்காப் பு குறைபாடுகள் நோய் தொற்றுகள், கதிர் வீச்சு, செல்சிதைக்கும் மற்றும் நோய்த்தடைக்காப்பை ஒடுக்கும் மருந்துகள் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

272. ____________ பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு குறைவு சிண்ட்ரோம்' எனப்படும்.

A) கேன்சர்

B) மூளை காய்ச்சல்

C) பால்வினை நோய்கள்

D) எய்ட்ஸ்

விளக்கம்: எய்ட்ஸ் என்பது 'பெறப்பட்ட நோய்த்தடைகாப்பு குறைவு சிண்ட்ரோம்' (Acquired Immuno Deficiency Syndrome) எனப்படும்.

273. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை?

1] எய்ட்ஸ் பிறவி நோய்.

2] எய்ட்ஸ் நோய் (HIV) மனித நோய்த்தடைகாப்பு குறைவு வைரஸ் தொற்றால் ஏற்படுவதாகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: எய்ட்ஸ் பிறவி நோயல்ல. எய்ட்ஸ் நோய் (HIV) மனித நோய்த்தடைகாப்பு குறைவு வைரஸ் தொற்றால் ஏற்படுவதாகும்.

274. HIV வைரஸ், ____________ தேர்ந்தெடுத்து தொற்றுகிறது.

A) உதவி T–செல்

B) உதவி b–செல்

C) உதவி t–செல்

D) உதவி B–செல்

விளக்கம்: HIV வைரஸ், உதவி T–செல்களை தேர்ந்தெடுத்து தொற்றுகிறது.

275. மனிதனின் நோய்த்தடைக்காப்பு குறைவு வைரஸ்____________ பேரினத்தை சார்ந்தது.

A) லென்டிவைரஸ்

B) மென்டிவைரஸ்

C) பென்டிவைரஸ்

D) லெடிவைரஸ்

விளக்கம்: மனிதனின் நோய்த்தடைக்காப்பு குறைவு வைரஸ் 'லென்டிவைரஸ்' பேரினத்தை சார்ந்தது.

276. லென்டிவைரஸின் விட்டம்____________

A) 100–110 nm

B) 105–120 nm

C) 110–120 nm

D) 100–120 nm

விளக்கம்: லென்டிவைரஸை மின்னனு நுண்ணோக்கி வழியே உற்றுநோக்கும் போது 100–120 nm விட்டமும், அடர்ந்த மையம் மற்றும் லிப்போபுரத உறையையும் கொண்ட கோளவடிவில் காணப்படுகிறது.

277. லென்டிவைரஸின் மேல்உறையில்____________ மற்றும் gp120 புரத நுண்முட்கள் காணப்படுகின்றன.

A) gp45

B) gp41

C) gp40

D) gp42

விளக்கம்: லென்டிவைரஸின் மேல்உறையில் gp41 மற்றும் gp120 என்றழைக்கப்படும் கிளைக்கோ புரத நுண்முட்கள் (Spikes) காணப்படுகின்றன.

278. HIV கடத்தப்படும் வழிமுறைகள் யாவை?

A) பாதுகாப்பற்ற உடல் உறவு

B) பாதிக்கப்பட்ட நபரின் இரத்த தொடர்பு கொண்ட ஊசிகள்

C) உறுப்பு மாற்றம்

D) இவை அனைத்தும்

விளக்கம்: பாதுகாப்பற்ற உடல் உறவு, பாதிக்கப்பட்ட நபரின் இரத்த தொடர்பு கொண்ட ஊசிகள், உறுப்பு மாற்றம், இரத்த ஏற்றம் மற்றும் எச்.ஐ.வி பாதிக்கப்பட்ட தாயின் மூலம் குழந்தைக்கு ஏற்படும் நேரடி கடத்தல் என பலவழிகளின் மூலம் எச்.ஐ.வி கடத்தப்படுகின்றது.

279. ஒரு மனிதனின் உடலில் நுழைந்த பிறகு, எச்.ஐ.வி தன்னுடைய ஆர்.என்.ஏ மரபணுத் தொகுதியை____________ நொதியின் உதவியால் வைரஸின் டி.என்.ஏவாக மாற்றிக் கொள்கிறது.

A) புரோட்டியேஸ்

B) ரிபோ நியூக்ளியேஸ்

C) மாலிக்னன்ட்

D) ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ்

விளக்கம்: ஒரு மனிதனின் உடலில் நுழைந்த பிறகு, எச்.ஐ.வி மேக்ரோபேஜ் செல்களில் நுழைந்து தன்னுடைய ஆர்.என்.ஏ மரபணுத் தொகுதியை ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் நொதியின் உதவியால் வைரஸின் டி.என்.ஏவாக மாற்றிக் கொள்கிறது.

280. லென்டிவைரஸில்____________ நொதிகளும் காணப்படுகின்றன.

A) புரோட்டியேஸ்

B) ரிபோ நியூக்ளியேஸ்

C) மாலிக்னன்ட்

D) A மற்றும் B

விளக்கம்: லென்டிவைரஸில் புரோட்டியேஸ் மற்றும் ரிபோ நீயூக்ளியேஸ் நொதிகளும் காணப்படுகின்றன.

281. எதிர்ப்பொருட்கள் உள்ளனவா என கண்டறியும் சோதனை____________

A) வெஸ்ட்டர்ன் பிளாட் சோதனை

B) எலிசா சோதனை

C) சாட்டர்ன் பிளாட் சோதனை

D) எலிட்டர்ன் சோதனை

விளக்கம்: எலிசா சோதனை (ELISA- Enzyme Linked Immuno orbent Assay) எச்.ஐ.வி எதிர்ப்பொருட்கள் உள்ளனவா என கண்டறியும் சோதனையாகும்.

282. மிகவும் நம்பகதன்மை வாய்ந்த உறுதிபடுத்தும் சோதனை____________

A) வெஸ்ட்டர்ன் பிளாட் சோதனை

B) எலிசா சோதனை

C) சாட்டர்ன் பிளாட் சோதனை

D) எலிட்டர்ன் சோதனை

விளக்கம்: வெஸ்ட்டர்ன் பிளாட் சோதனை மிகவும் நம்பகதன்மை வாய்ந்த உறுதிபடுத்தும் சோதனையாகும். இது வைரஸின் மைய புரதங்களை கண்டறிகிறது. இவ்விரண்டு சோதனைகளிலும் எச்.ஐ.வி எதிர்ப்பொருட்கள் இரத்தத்தில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அந்நபர் எச்.ஐ.விபாதிப்புக்கு உள்ளானவராக கருதப்படுகிறார்.

283. உடலின் செல்களே அதே உடலில் எதிர்ப்பொருள் தூண்டிகளாக செயல்படுவது ____________

A) எதிர்ப்பொருள் தூண்டி

B) சுய எதிர்ப்பொருள்

C) சுய எதிர்ப்பொருள் தூண்டிகள்

D) இவற்றில் எதுவுமில்லை

விளக்கம்: உடலின் செல்களே அதே உடலில் எதிர்ப்பொருள் தூண்டிகளாக செயல்படுவது சுய எதிர்ப்பொருள் தூண்டிகள் (Auto antigens) என அழைக்கப்படுகின்றன.

284. ____________ கோளாறுகளில் சுயதடைக்காப்பு நிகழ்வுகள் உடல் முழுவதும் பரவுகின்றன.

A) உறுப்பு சார்ந்த

B) கட்டி நோய்த்தடைக்காப்பியல்

C) மெட்டாஸ்டாசிஸ்

D) உறுப்புச்சாரா

விளக்கம்: உறுப்புச்சாரா மண்டலக் கோளாறுகளில் சுயதடைக்காப்பு நிகழ்வுகள் உடல் முழுவதும் பரவுகின்றன.

285. ரூமாட்டிக் மூட்டுவலி____________

A) உறுப்பு சார்ந்த சுயதடைக்காப்பு நோய்

B) கட்டி நோய்த்தடைக்காப்பியல்

C) மெட்டாஸ்டாசிஸ்

D) உறுப்புச்சாரா சுயதடைக்காப்பு நோய்

விளக்கம்: உறுப்பு சாரா சுயதடைக்காப்பு நோய்களுக்கு எடுத்துக்காட்டு: ரூமாட்டிக் மூட்டுவலி மற்றும் தண்டு வட மரப்பு நோய்கள்.

286. உறுப்பு சார்ந்த சுயதடைக்காப்பு நோய்கள் அல்லாதவை எவை?

A) அடிசன் நோய்

B) ஹசிமோட்டோ தைராய்டு வீக்க நோய்

C) கிரேவின் நோய்

D) தண்டு வட மரப்பு நோய்கள்

விளக்கம்: உறுப்பு சார்ந்த சுயதடைக்காப்பு நோய்களுக்கு எடுத்துக்காட்டு: ஹசிமோட்டோ தைராய்டு வீக்க நோய், கிரேவின் நோய் (தைராய்டு சுரப்பி) மற்றும் அடிசன் நோய் (அட்ரினல் சுரப்பி).

287. சுய எதிர்ப்பொருட்கள் அந்த உறுப்பின் பணிகளை தடைச்செய்வது____________

A) உறுப்பு சார்ந்த சுயதடைக்காப்பு நோய்

B) கட்டி நோய்த்தடைக்காப்பியல்

C) மெட்டாஸ்டாசிஸ்

D) உறுப்புச்சாரா சுயதடைக்காப்பு நோய்

விளக்கம்: உறுப்பு சார்ந்த நோயில்சுயதடைக்காப்பு நிகழ்வுகள் பெரும்பாலும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட உறுப்புக்கு எதிராகவே அமைகின்றன. இதில் சுய எதிர்ப்பொருட்கள் அந்த உறுப்பின் பணிகளை தடைச்செய்கின்றன.

288. கட்டி தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து இயல்பா ன திசுக்களையும் ஆக்கிரமிப்பது

A) புற்றுநோய்

B) மூளை காய்ச்சல்

C) பால்வினை நோய்கள்

D) எய்ட்ஸ்

விளக்கம்: கட்டி தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து இயல்பா ன திசுக்களையும் ஆக்கிரமிப்பது புற்றுநோய் எனப்படும்.

289. கட்டியில் இருந்து உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவி இரண்டாம் நிலை கட்டிகளை ஏற்படுத்துவது____________

A) மாலிக்னன்ட்

B) பெனைன்

C) பரவல்

D) மெட்டாஸ்டாசிஸ்

விளக்கம்: கட்டியில் இருந்து உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவி இரண்டாம் நிலை கட்டிகளை ஏற்படுத்துகின்றன. இந்நிலைக்கு வேற்றிட பரவல் அல்லது மெட்டாஸ்டாசிஸ் (Metastasis) என்று பெயர்.

290. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] பண்புகளின் அடிப்படையில் கட்டிகளை பெனைன் என்பது சாதாரண கட்டிகள் ஆகும்.

2] மாலிக்னன்ட் என்பது புற்றுநோய் கட்டிகள் ஆகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: பண்புகளின் அடிப்படையில் கட்டிகளை பெனைன் (Benign) அல்லது சாதாரண கட்டிகள் மற்றும் மாலிக்னன்ட் (Malignant) அல்லது புற்றுநோய் கட்டிகள் என பிரிக்கலாம்.

291. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] சாதரான கட்டி என்பது கட்டுப்படுத்த முடியாத அபரிதமான வளர்ச்சியுடையது.

2] உடலின் மற்ற திசுக்களை ஆக்கிரமிக்காத தன்மையுடைவையாகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: சாதரான கட்டி என்பது கட்டுப்படுத்த முடியாத அபரிதமான வளர்ச்சியுடையது. ஆனால் உடலின் மற்ற திசுக்களை ஆக்கிரமிக்காத தன்மையுடைவையாகும்.

292. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] புற்றுநோய் கட்டியின் செல்கள் கட்டுப்படுத்த முடியாத அபரிதமான வளர்ச்சியுடையவை.

2] கட்டியின் செல்கள் பிரிந்து உடலின் மற்ற ஆரோக்கியமான திசுக்களுக்கும் பரவக்கூடியதாகும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: புற்றுநோய் கட்டியின் செல்கள் கட்டுப்படுத்த முடியாத அபரிதமான வளர்ச்சியுடையவை. ஆனால் கட்டியின் செல்கள் பிரிந்து உடலின் மற்ற ஆரோக்கியமான திசுக்களுக்கும் பரவக்கூடியதாகும்.

293. இயல்பான செல்களில் ____________ மூலம் கட்டுப்பாடற்ற செல் வளர்ச்சி தடுக்கப்படுகிறது.

A) இயல்பான தடை

B) தொடர்ச்சியான தடை

C) பெறப்பட்ட தடை

D) தொடர்பு தடை

விளக்கம்: இயல்பான செல்களில், 'தொடர்பு தடை' மூலம் கட்டுப்பாடற்ற செல் வளர்ச்சி தடுக்கப்படுகிறது.

294. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இயல்பான செல்கள் சிறியதாகவும் ஒரே மாதிரியான வடிவத்தையும் குறைந்த சைட்டோபிளாச அளவையும் கொண்டவை.

2] செல்லின் அளவு மற்றும் அவற்றின் வடிவம் ஆகியவை ஒரே மாதிரியாக உள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இயல்பான செல்கள் சிறியதாகவும் ஒரே மாதிரியான வடிவத்தையும் அதிக சைட்டோபிளாச அளவையும் கொண்டவை. செல்லின் அளவு மற்றும் அவற்றின் வடிவம் ஆகியவை ஒரே மாதிரியாக உள்ளன. செல்கள், தெளிவான திசுக்களாக வரிசையமைக்கப்பட்டுள்ளன.

295. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இயல்பான செல்கள் வேறுபட்ட செல் அமைப்புகளை உடையன.

2] இயல்பான செல் புறத்தோற்ற சுட்டிகளை (Surface marker) வெளிப்படுத்துகின்றன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இயல்பான செல்கள் வேறுபட்ட செல் அமைப்புகளை உடையன. இயல்பான செல் புறத்தோற்ற சுட்டிகளை (Surface marker) வெளிப்படுத்துகின்றன.

296. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] இயல்பான செல்களில் பிளவுறும் செல்களின் அளவு அதிகம்.

2] இச்செல்கள் தெளிவான பிளாஸ்மா சவ்வால் பிரிக்கப்பட்டுள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: இயல்பான செல்கள் பிளவுறும் செல்களின் அளவு குறைவு. மேலும் இச்செல்கள் தெளிவான பிளாஸ்மா சவ்வால் பிரிக்கப்பட்டுள்ளன.

297. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] புற்றுநோய் செல்கள் பெரிய மாறுபட்ட வடிவிலான உட்கருவையும் குறைவான சைட்டோபிளாச அளவையும் கொண்டவை.

2] செல்லின் அளவு வடிவங்களில் மாறுபாடுடையன. செல்கள் வரிசையமப்பு ஒழுங்கற்று காணப்படும்.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: புற்றுநோய் செல்கள் பெரிய மாறுபட்ட வடிவிலான உட்கருவையும் குறைவான சைட்டோபிளாச அளவையும் கொண்டவை. செல்லின் அளவு வடிவங்களில் மாறுபாடுடையன. செல்கள் வரிசையமப்பு ஒழுங்கற்று காணப்படும்.

298. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] புற்றுநோய் செல்கள் இயல்பான பல சிறப்பு வாய்ந்த பண்புகளை இழக்கின்றன.

2] சில செல் புறத்தோற்ற சுட்டிகளை (Surface marker) அதிகமாக வெளிப்படுத்துகின்றன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: புற்றுநோய் செல்கள் இயல்பான பல சிறப்பு வாய்ந்த பண்புகளை இழக்கின்றன. சில செல் புறத்தோற்ற சுட்டிகளை (Surface marker) அதிகமாக வெளிப்படுத்துகின்றன.

299. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] புற்றுநோய் செல்களில் பிளவுறும் செல்களின் எண்ணிக்கை குறைவு .

2] இச்செல்கள் தெளிவற்ற செல் சுவரால் சூழப்பட்டுள்ளன.

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

விளக்கம்: புற்றுநோய் செல்கள் பிளவுறும் செல்களின் எண்ணிக்கை அதிகம். மேலும் இச்செல்கள் தெளிவற்ற செல் சுவரால் சூழப்பட்டுள்ளன.

300. தடைக்காப்பு சிகிச்சையை____________ எனவும் அழைக்கலாம்.

A) எதிர்ப்பு சிகிச்சை

B) நோய் சிகிச்சை

C) தடைக்காப்பியல்சிகிச்சை

D) உயிரியல் சிகிச்சை

விளக்கம்: தடைக்காப்பு சிகிச்சையை உயிரியல் சிகிச்சை எனவும் அழைக்கலாம்.

301. தடைக்காப்பு சிகிச்சையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் உடல் அல்லது ஆய்வகத்தில்____________ உருவாக்கப்படுகின்றன.

A) ஈரின எதிர்ப்பொருள்

B) மூவின எதிர்ப்பொருள்

C) பல்லின எதிர்ப்பொருள்

D) ஓரின எதிர்ப்பொருள்

விளக்கம்: தடைக்காப்பு சிகிச்சையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் உடல் அல்லது ஆய்வகத்தில் (ஓரின எதிர்ப்பொருள் – monoclonal antibodies) உருவாக்கப்படுகின்றன.

302. விடலைப்பருவம்____________

A) 11– 18 வயது

B) 12– 17 வயது

C) 13– 18 வயது

D) 12–19 வயது

விளக்கம்: பூப்பெய்துதலில் தொடங்கி முதிர்ச்சியடைதல் நிறைவடையும் காலகட்டமான 12–19 வயது வரையிலான உடல் மற்றும் இனப்பெருக்க உறுப்புகளின் தீவிர வளர்ச்சிக் காலமே விடலைப்பருவம் எனப்படும்.

303. ____________ என்பது மனத்தின் மீது செயல்படும் (Psychoactive) மருந்தாகும்.

A) போதை மருந்துகள்

B) மது

C) புகைப்பழக்கம்

D) போதை ஊசிகள்

விளக்கம்: மது என்பது மனத்தின் மீது செயல்படும் (Psychoactive) மருந்தாகும்.

304. கூற்று(A): சில மருந்துகளை அதனுடைய இயல்பான மருத்துவ பயன்பாட்டின் நோக்கத்தை தவிர்த்து, அதிக அளவிலும் மற்றும் குறுகிய கால இடைவெளியிலும் ஒருவரின் உடல், உடற்செயலியல் மற்றும் உளவியல் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துகின்றனர். இதுவே

காரணம்(R): இதுவே போதை மருந்துப் பழக்கம் (Drug abuse) எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

விளக்கம்: சில மருந்துகளை அதனுடைய இயல்பான மருத்துவ பயன்பாட்டின் நோக்கத்தை தவிர்த்து, அதிக அளவிலும் மற்றும் குறுகிய கால இடைவெளியிலும் ஒருவரின் உடல், உடற்செயலியல் மற்றும் உளவியல் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துவதே, போதை மருந்துப் பழக்கம் (Drug abuse) எனப்படும்.

305. வரையறையின்றி பயன்படுத்தப்படும் போதை மருந்துகள் யாவை?

A) ஒ.ஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: ஒ.ஃபியாய்டுகள் (Ophioids), கேனபினாய்டுகள் (Cannabinoids), கோகா–அல்கலாய்டுகள் (Coca– alkaloids), பார்பிசுரேட் டுகள் (Barbiturates), ஆம்.ஃபிடமைன்கள் (Amphetamines) மற்றும் எல்.எஸ்.டி (LSD– Lysergic acid diethylamide) ஆகியவை பொதுவாக வரையறையின்றி பயன்படுத்தப்படும் போதை மருந்துகளாகும்.

306. ____________ என்பது மைய நரம்பு மண்டலம் மற்றும் குடல் பாதைகளில் காணப்படும்.

A) ஒ.ஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட்டுகள்

D) எல்.எஸ்.டி

விளக்கம்: ஒ.ஃபியாய்டு என்பது மைய நரம்பு மண்டலம் மற்றும் குடல் பாதைகளில் காணப்படும் குறிப்பிட்ட ஒ.ஃபியாய்டு உணர்வேற்பிகளுடன் இணையும் போதை மருந்தாகும்.

307. ____________ என்பது டைஅசிட்டைல் மார்.ஃபின் என்ற வெள்ளை நிற மணமற்ற மற்றும் கசப்பான படிக நிலையிலுள்ள கூட்டுப்பொருளாகும்.

A) ஒ.ஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட்டுகள்

D) ஹெறாய்ன்

விளக்கம்: ஹெறாய்ன் (Heroin) என்பது டைஅசிட்டைல் மார்.ஃபின் என்ற வெள்ளை நிற மணமற்ற மற்றும் கசப்பான படிக நிலையிலுள்ள கூட்டுப்பொருளாகும்.

308. ____________ கசகசா செடியின் பூக்களிலிருந்து பெறப்படுகின்றது.

A) ஒ.ஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) ஹெறாய்ன்

விளக்கம்: ஹெராய்ன் கசகசா செடியின் (poppy plant) பூக்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற மார்ஃபினை அசிட்டைலேற்றம் (acetylation) செய்வதன் மூலம் பெறப்படுகின்றது.

309. ____________ என்பது அறுவை சிகிச்சையின் பொழுது பயன்படுத்தப்படும் வலிமையான வலி நீக்கி மருந்தாகும்.

A) ஒஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: மார்ஃபின் என்பது அறுவை சிகிச்சையின் பொழுது பயன்படுத்தப்படும் வலிமையான வலி நீக்கி மருந்தாகும்.

310. உடலின் செயல்பாடுகளை குறைக்கும் மனஅழுத்தவூக்கியாக செயல்புரிவது____________

A) ஒஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: மார்ஃபின் உடலின் செயல்பாடுகளை குறைக்கும் மனஅழுத்தவூக்கியாக செயல்புரிகின்றது.

311. இந்திய சணல் (Hemp plant) செடியிலிருந்து பெறப்படுகின்ற கூட்டு வேதிப்பொருட்கள்____________

A) ஒஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: கேனபினாய்டுகள் என்பவை கேனாபிஸ் சடைவா (Cannabis sativa) என்ற இந்திய சணல் (Hemp plant) செடியிலிருந்து பெறப்படுகின்ற கூட்டு வேதிப்பொருட்களாகும்.

312. இயற்கையான கேனபினாய்டுகள் மூலாதாரமாக விளங்குபவை அல்லாதவை எவை?

A) மரிஜூவானா

B) கஞ்சா

C) ஹசிஷ்

D) டோபமைன்

விளக்கம்: மரிஜூவானா (Marijuana), கஞ்சா (Ganja), ஹசிஷ் (Hashish) மற்றும் சாரஸ் (Charas) போன்றவற்றின் முக்கிய மூலாதாரமாக விளங்குபவை இயற்கையான கேனபினாய்டுகள் ஆகும்.

313. ____________ நரம்புணர்வு கடத்தியான டோபமைன் (Dopamine) கடத்தப்படுதலில் குறுக்கிடுகிறது.

A) ஒஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: கேனபினாய்டுகள் நரம்புணர்வு கடத்தியான டோபமைன் (Dopamine) கடத்தப்படுதலில் குறுக்கிடுகிறது.

314. மைய நரம்பு மண்டலத்தின் (CNS) செயல்பாட்டைத் தூண்டும் திறனைப் பெற்றுள்ளது____________

A) ஒஃபியாய்டுகள்

B) கேனபினாய்டுகள்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: கேனபினாய்டுகள் மைய நரம்பு மண்டலத்தின் (CNS) செயல்பாட்டைத் தூண்டும் திறனைப் பெற்றுள்ளதால் அதிக ஆற்றல் மற்றும் மகிழ்ச்சி (Euphoria) உணர்வையும் ஏற்படுத்துகிறது.

315. எரித்ரோசைலம் கோகா (Erythroxylum coca) எனும் தாவரப் பெயர் கொண்டது____________

A) ஒஃபியாய்டுகள்

B) கோகைன்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: கோகைன் என்பது, எரித்ரோசைலம் கோகா (Erythroxylum coca) எனும் தாவரப் பெயர் கொண்ட கோகா தாவரத்தின் இலைகளிலிருந்து பெறப்படுகின்ற வெள்ளை நிற பொடியாகும்.

316. பிரமைஉள்ளிட்ட தீவிர உடல் மற்றும் உளவியல் சார்ந்த கோளாறுகளை ஏற்படுத்துவது___________

A) ஒஃபியாய்டுகள்

B) கோகைன்

C) பார்பிசுரேட் டுகள்

D) மார்ஃபின்

விளக்கம்: கோகைன் மனமருட்சி (Hallucination) மற்றும் பிரமை (Paranoia) உள்ளிட்ட தீவிர உடல் மற்றும் உளவியல் சார்ந்த கோளாறுகளை ஏற்படுத்துகிறது.

317. மருட்சியை ஏற்படுத்தும் பண்பைக் கொண்டதாவரங்கள் யாவை?

A) அட்ரோபா பெல்லாடோன்னா

B) டாட்டுரா

C) எரித்ரோசைலம் கோகா

D) A மற்றும் B

விளக்கம்: அட்ரோபா பெல்லாடோன்னா (Atropa belladonna) மற்றும் டாட்டுரா(Datura) ஆகியவைமன மருட்சியை ஏற்படுத்தும் பண்பைக் கொண்ட மற்ற தாவரங்களாகும்.

318. கிளர்வூட்டிகள் தொகுதியை சேர்ந்த போதைமருந்துகள் அல்லாதவை எவை?

A) ஆம்ஃபிடமைன்கள்

B) கோகைன்

C) நிக்கோட்டின்

D) அபின்

விளக்கம்: கிளர்வூட்டிகள் தொகுதி: ஆம்ஃபிடமைன்கள், கோகைன், நிக்கோட்டின் மற்றும் புகையிலை (Tobacco)

319. மன அழுத்தவூக்கிகள் தொகுதியை சேர்ந்த போதைமருந்துகள் எவை?

A) மது

B) பார்பிட்டுரேட்டுகள்

C) அமைதியூக்கிகள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: மன அழுத்தவூக்கிகள் தொகுதியை சேர்ந்த போதைமருந்துகள்: பார்பிட்டுரேட்டுகள், அமைதியூக்கிகள், மது.

320. அபின் என்பது ___________

A) மன மருட்சி மருந்துகள்

B) போதை மருந்து

C) கிளர்வூட்டிகள்

D) மன அழுத்தவூக்கிகள்

விளக்கம்: போதை மருந்து /வலி நிவாரணிகள்: அபின், மார்ஃபின்.

321. லைசர்ஜிக் அமில டைஎத்தில் அமைடு(LSD) என்பது ___________

A) மன மருட்சி மருந்துகள்

B) போதை மருந்து

C) கிளர்வூட்டிகள்

D) மன அழுத்தவூக்கிகள்

விளக்கம்: மன மருட்சி மருந்துகள்: லைசர்ஜிக் அமில டைஎத்தில் அமைடு, ஃபென்சைக்ளிடைன்.

322. மரிஜுவானா என்பது ___________

A) மன மருட்சி மருந்துகள்

B) கிளர்வூட்டிகள்

C) மன அழுத்தவூக்கிகள்

D) A மற்றும் B மற்றும் C

விளக்கம்: மன மருட்சி மருந்துகள், கிளர்வூட்டிகள், மன அழுத்தவூக்கிகள்: மரிஜுவானா, கஞ்சா, சாரஸ்.

323. மன நோயாளிகளை குணப்படுத்த பயன்படும் மருந்துகள் யாவை?

A) மெத்தாம்ஃபிட்டமின்கள்

B) ஆம்ஃபிட்டமின்கள்

C) பார்பிசுரேட்டுகள்

D) இவை அனைத்தும்

விளக்கம்: மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்ற மன நோயாளிகளை குணப்படுத்த பயன்படும் மருந்துகளான மெத்தாம்ஃபிட்டமின்கள் (Methamphetamines) ஆம்ஃபிட்டமின்கள் (Amphetamines), பார்பிசுரேட்டுகள், (Barbiturates) அமைதியூக்கிகள் (Tranquilizers) மற்றும் எல்.எஸ்.டி போன்றவை அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

324. புகையிலையில்அடங்கியுள்ள கோளாறுகளை ஏற்படுத்தும் பொருள்கள் யாவை?

A) நிகோடின்

B) கார்பன் மோனாக்சைடு

C) தார்

D) இவை அனைத்தும்

விளக்கம்: இதயம் , நுரையீரல் மற்றும் நரம்பு மண்டலத்தில் கோளாறுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்ட நிகோடின், கார்பன் மோனாக்சைடு மற்றும் தார் ஆகியவை புகையிலையில் அடங்கியுள்ளன.

325. அட்ரினல் சுரப்பிகளைத் தூண்டுவது___________

A) நிகோடின்

B) கார்பன் மோனாக்சைடு

C) தார்

D) மரிஜூவானா

விளக்கம்: நிகோட்டின், அட்ரினல் சுரப்பிகளைத் தூண்டுவதன் மூலம் வெளியேறும் அட்ரினலின் மற்றும் நார் அட்ரினலின் ஹார்மோன்கள், இரத்த அழுத்தம் மற்றும் இதயத்துடிப்பு வீதத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

326. மன அழுத்தத்தின் அறிகுறிகள் யாவை?

A) தன்னம்பிக்கை இழத்தல்

B) கவலை

C) சுய மரியாதையை இழத்தல்

D) இவை அனைத்தும்

விளக்கம்: மன அழுத்தத்தின் அறிகுறிகள்1. தன்னம்பிக்கை மற்றும் சுய மரியாதையை இழத்தல் 2. கவலை 3. பொதுவாக மகிழ்ச்சி தரக்கூடிய அல்லது ஆர்வமிக்கவற்றை அனுபவிக்க இயலாத நிலை.

327. உடற்பயிற்சியானது உடலைத் தூண்டி___________ மற்றும் எண்டார்ஃபின்களை (Endorphins) சுரக்கச் செய்கிறது.

A) எண்டார்னின்

B) செரபின்

C) டார்ஃபின்

D) செரடோனின்

விளக்கம்: உடற்பயிற்சியானது உடலைத் தூண்டி செரடோனின் (Serotonin) மற்றும் எண்டார்ஃபின்களை (Endorphins) சுரக்கச் செய்கிறது.

328. உடலில் அதிக அளவு வளர்சிதை மாற்றம் நடைபெறும் உறுப்பு___________

A) இதயம்

B) தலை

C) நுரையீரல்

D) மூளை

விளக்கம்: உடலில் அதிக அளவு வளர்சிதை மாற்றம் நடைபெறும் உறுப்பு மூளை ஆகும்.

329. அனாமதேய குடிகாரர்கள் என்ற அமைப்பை___________ ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

A) 1937

B) 1935

C) 1934

D) 1936

விளக்கம்: அனாமதேய குடிகாரர்கள் என்ற அமைப்பை பல ஆண்டுகளாக வாழ்வில் நம்பிக்கை இழந்து, குடியில் மூழ்கியிருந்த ஒரு தொழில் அதிபரும் ஒரு மருத்துவரும் சேர்ந்து 1935ஆம் ஆண்டு தொடங்கினர்.

330. ___________ கடுமையான நினைவு குறைபாட்டு நோய் மதுவை அதிகமாக பயன்படுத்துவதால் ஏற்படுகிறது.

A) எண்டார்னின் நோய்

B) செரபின் நோய்

C) டார்ஃபின் நோய்

D) கொர்சகாஃப் நோய்

விளக்கம்: "கொர்சகாஃப் நோய்" (Korsakoff syndrome) என்ற கடுமையான நினைவு குறைபாட்டு நோய் மதுவை அதிகமாக பயன்படுத்துவதால் ஏற்படுகிறது.

331. அதிகப்படியான அமில உற்பத்தியால்___________ சுவரின் படலம் மதுவினால் சிதைக்கப்பட்டு குடற்புண் ஏற்பட வழிவகுக்கும்.

A) கல்லீரல்

B) மண்ணீரல்

C) நுரையீரல்

D) இரைப்பை

விளக்கம்: அதிகப்படியான அமில உற்பத்தியால் இரைப்பைச் சுவரின் படலம் மதுவினால் சிதைக்கப்பட்டு குடற்புண் ஏற்பட வழிவகுக்கும்.

332. உறையவைத்தல் (Freezing) முறையில்___________ கொல்ல இயலாது.

A) வைரஸ்

B) பூஞ்சை

C) புரொட்டசோவா

D) பாக்டீரியா

விளக்கம்: உறையவைத்தல் (Freezing) முறையில் பாக்டீரியாக்களை கொல்ல இயலாது. இதன் மூலம் அதனுடைய வளர்ச்சியை மட்டுமே நிறுத்த முடியும்.

333. உலக மலேரியா தினம்___________

A) மே 26

B) மே 25

C) ஏப்ரல் 25

D) ஏப்ரல் 26

விளக்கம்: உலக மலேரியா தினம் ஏப்ரல் 25 ஆகும்.

334. ___________ மற்றும் ஃபரோ தீவுகள் (Faroe islands) மட்டுமே உலகில் 'கொசு இல்லாத' நாடுகள் ஆகும்.

A) நியூஸிலாந்து

B) நெதர்லாந்து

C) ஸ்விட்சர்லாந்து

D) ஐஸ்லாந்து

விளக்கம்: ஐஸ்லாந்து (Iceland) மற்றும் ஃபரோ தீவுகள் (Faroe islands) மட்டுமே உலகில் 'கொசு இல்லாத' நாடுகள் ஆகும்.

335. நோய்கடத்தி தடுப்பு ஆராய்ச்சி மையம் எங்குள்ளது___________

A) சென்னை

B) டெல்லி

C) பெங்களூரு

D) புதுச்சேரி

விளக்கம்: நோய்கடத்தி தடுப்பு ஆராய்ச்சி மையம் (VCRC) புதுச்சேரியில் உள்ளது. இம்மையத்துடன் யானைக்கால் நோய் மற்றும் ஒருங்கிணைந்த நோய்கடத்தி கட்டுப்பாடு முறைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

336. பூச்சிகளை மலடாக்கும் தொழில் நுட்பம் மூலம் ஒரு நிலப்பரப்பிலிருந்து வெற்றிகரமாக நீக்கப்பட்ட தீங்குயிரி___________

A) திருகு ஈ

B) செட்சி ஈ

C) திருகுப்புழு

D) செட்சிப்புழு

விளக்கம்: பூச்சிகளை மலடாக்கும் தொழில் நுட்பம் (SIT): இத்தொழில் நுட்பத்தின் மூலம் ஒரு நிலப்பரப்பிலிருந்து வெற்றிகரமாக நீக்கப்பட்ட தீங்குயிரி, திருகுப்புழு (Screw – worm fly) எனும் பூச்சியினமாகும்.

337. ___________ மூளை புற்று நோய்க்கு எதிரான அறுவை சிகிச்சை ஆயுதமாக பயன்படுத்த முடியும்.

A) மிகா வைரஸ்

B) பிகா வைரஸ்

C) விகா வைரஸ்

D) ஸிகா வைரஸ்

விளக்கம்: ஸிகா வைரஸ் (Zika virus) மூளை புற்று நோய்க்கு எதிரான அறுவை சிகிச்சை ஆயுதமாக பயன்படுத்த முடியும்.

338. ___________ ன்பது சாதாரணமாக உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் 150 மில்லியன் மக்களை பாதிக்கும் பாக்டீரியா தொற்றாகும்.

A) கல்லீரல் பாதை தொற்று

B) மண்ணீரல் பாதை தொற்று

C) இரைப்பை பாதை தொற்று

D) சிறுநீர் பாதை தொற்று

விளக்கம்: சிறுநீர் பாதை தொற்று (UTI– Urinary Tract infection) என்பது சாதாரணமாக உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் 150 மில்லியன் மக்களை பாதிக்கும் பாக்டீரியா தொற்றாகும்.

339. எய்ட்ஸ் வைரஸில் காணப்படுவது___________

A) ஒற்றை இழை ஆர்.என்.ஏ

B) இரட்டை இழை ஆர்.என்.ஏ

C) ஒற்றை இழை டி.என்.ஏ

D) இரட்டை இழை டி.என்.ஏ

விளக்கம்: எய்ட்ஸ் வைரஸில் காணப்படுவது: ஒற்றை இழை ஆர்.என்.ஏ

340. ____________ அதிகமாக எடுத்துக்கொள்வது கல்லீரல் அழற்சி நோயை ஏற்படுத்துகிறது.

A) அபின்

B) மது

C) புகையிலை

D) கோகெய்ன்

விளக்கம்: மது அதிகமாக எடுத்துக்கொள்வது கல்லீரல் அழற்சி நோயை ஏற்படுத்துகிறது.

341. ஆம்ஃபிடமைன்கள் மத்திய நரம்பு மண்டலத்தை (CNS) கிளர்வூட்டுபவையாகும். அதே போல் பார்பிடுரேட்டுகள் ____________ ஆகும்.

A) மைய நரம்பு மண்டல கிளர்வூட்டி

B) மன மருட்சி ஏற்படுத்துபவை

C) அ மற்றும்ஆ இரண்டும்

D) மைய நரம்பு மண்டல சோர்வூட்டி

விளக்கம்: ஆம்ஃபிடமைன்கள் மத்திய நரம்பு மண்டலத்தை (CNS) கிளர்வூட்டுபவையாகும். அதே போல் பார்பிடுரேட்டுகள் மைய நரம்பு மண்டல சோர்வூட்டி ஆகும்.

342. 30 வயதுடைய பெண்ணிற்கு 14 மணி நேரமாக இரத்தம் கலந்த வயிற்றுக்போக்கு தொடர்ந்து வெளியேறுகிறது. கீழ்க்கண்ட எந்த உயிரி இந்த கேட்டினை ஏற்படுத்தும்?

A) ஸ்ட்ரெப்டோகாக்கஸ் பயோஜென்ஸ்

B) கிளாஸ்டிரிடியம் டிஃபிசைல்

C) ஷிஜெல்லா டிஸ்சென்ட்ரியே

D) சால்மோனெல்லா என்ட்ரைடிடிஸ்

343. புற்றுநோய்க் ஏதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது?

A) கதிர்வீச்சு சிகிச்சை

B) வேதிச்சிகிச்சை

C) கூட்டு அறுவை சிகிச்சை

D) இவை அனைத்தும்

விளக்கம்: ஒருங்கிணைந்த சிகிச்சைகளான கதிர்வீச்சு சிகிச்சை, வேதிச்சிகிச்சை, கூட்டு அறுவை சிகிச்சை,ஆகிய ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் புற்றுநோய்க் கட்டுப்படுத்தப்படுகிறது.

344. எதிர்ப்பொருள்களை அதிக அளவு உற்பத்தி செய்து வெளியிடும் B செல் வகை யாது?

A) நினைவாற்றல் செல்கள்

B) பேசா பில்கள்

C) பிளாஸ்மா செல்கள்

D) கொல்லி செல்கள்

விளக்கம்: பிளாஸ்மா செல்கள் எதிர்ப்பொருள்களை அதிக அளவு உற்பத்தி செய்து வெளியிடும் B செல் வகை ஆகும்.

345. பி. வைவாக்ஸின் ஸ்போரோ சோயிட்டுகள்____________ ல் உருவாக்கப்பட்டது.

A) கேமிட்டோசைட்டுகள் (இனச்செல்கள்)

B) ஸ்போரோபிளாஸ்டுகள்

C) ஊசிஸ்டுகள்

D) ஸ்போர்கள்

விளக்கம்: பி. வைவாக்ஸின் ஸ்போரோ சோயிட்டுகள் ஊசிஸ்டுகளில் உருவாக்கப்பட்டது.